# சிரித்திரன்




CHIRITHIRAN

A CARTOON MAGAZINE

டிசம்பர் : 1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் எப்போது பெண் பார்க்க வாற உத்தேசம்?"

"பெண் பார்க்கவே தேவையில்லே. உங்கள் பெண் அணிவது லலிதா நகைகள் தானே. லலிதா நகைகள் அணியும் எந்தப் பெண்ணும் அழகுத் தெய்வமாகத்தான் இருப்பாள்."



★



தங்க மன்சு படைத்தவர்கள்
இன்றே விஜயம் செய்யுங்கள்



# லலிதா ஜுவலறி

உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து

இல. 133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றுருவல்

டிசம்பர் 1971
நகை: 8
சுவை: 3



# உஷ்.... ரகசியம்!

■ மஹ்திஹஸன் இப்ருஹிம் ■

'டேய் முனியாண்டி, நாளை என்ன நாள்னு ஞாபகமிருக்கா?'

'அதென்ன அப்படிக் கேட்டுட்டே? நாளைக்குத்தானே நம்ம திட்டம் நிறைவேறப்போகுது... மறப்பேனு?'

'சரி...சரி... நாளைக்கு எல்லோரும் கரெக்டா டைமுக்கு வந்துடணும்...... முன்பு பேசிக்கொண்டபடி சரியாக 7-30க்கு ஆலமரத்தடியில் நிக்கணு. அப்புறமா எல்லாரும் சேர்ந்தே புறப்படலாம்.'

'அதெல்லாம் கரெக்டா வந்துடுவோம்...நாம் எதுக்கும் ரெடிடா... எவன் வந்தாலும் விடமாட்டோம். அடிதடிக்கும் ரெடியாத்தான் வருவோம்.'

'மனேஜர் நம்ம ஆளுன்னு இப்படிக் கஷ்டப்படத் தேவை இல்ல. ஆனு அந்த மனேஜர் வழிக்கு வரமாட்டேன் என்கிருரு. அவருக்கு சரியான பாடம் படிப்பிக்கணும்டா''

ஆமா முந்தி இருந்த மனேஜர் நல்லவர்; கேட்டதும் கொடுத்துடுவார். இப்போ இருக்கிறவர்தான் கொஞ்சம் கூட வளைஞ்சு கொடுக்கிறதில்லே.'

'நாளைக்கு நம்ம காரியம் ஆகட்டும்; அப்புறமா அவரைக் கவனிச்சுக் கொள்வோம். ஆமா... வோச்சர் விஷயம் எப்படி?'

'நாளைக்கு ஸ்பெஷலா இரண்டு மூன்று வோச்சர் கூடப் போடுறுங்களாம். நாம எப்படி மேலே ஏறிப் போறது என்று நினைக்கிறப்போ பயமாவும் இருக்கு.'

'இதுக்கெல்லாம் பயந்தா எப்படி? நம்ம வழக்கப்படி நாம திட்டம் போட்டா அதைக் கட்டாயம் நிறைவேற்றி ஆகணும். ஆமா... நாளைக்கு சம்பளம் வருவது நிச்சயம்தானே?'

'அது தெரிஸ்சுதானே நாம இந்தப் பிளானையே போட்டோம்''

'எப்படியோ சம்பளம் வந்தா சரிதான். இந்த விஷயம் வேறு யாருக்குத் தெரியும்?'

'நம்ம பயல்களுக்கு மட்டும் தான் தெரியும். மத்தவங்களுக்குத் தெரிஞ்சாப் போச்சு... நாங்களும் வர்ரோம் என்று தொந்தரவாப் போயிடும்'

---

## ஜேம்ஸ்பொண்ட் ரசிகர்களுக்கு

மேலே காணப்படுவது இரு திருடர்களின் திட்டம் என்று எண்ணிவிடாதீர்கள்! இரு திரைப்பட ரசிகர்கள் மறு நாள் திரையிடப் போகும் படத்தை முதல் நாள், முதல் காட்சியை கலரியில் பார்க்கப் போட்ட மகத்தான திட்டம்தான் இது!

---



ஒருவர்: என்னுடைய மகன் உங்க மகளைக் கல்யாணம் செய்ய விரும்புகிருன்.

மற்றவர்: அவர் என்ன உத்தியோகம்?

ஒருவர்: கிளறிக்கல் சேர்வன்ட்.

மற்றவர்: என்னுடைய மகளுக்கு எஞ்சினியர், டாக்டர், அக்கவுண்டன் ஒருத்தரும் கிடைக்காவிட்டால் அவரைக் கல்யாணம் செய்து வைப்போம்.

— அதிமதுரம்

## மோட்டார் வாகனமல்ல!

சற்றுப் பொறு, சூடேறவில்லே.

எங்கே இனி எடு பார்ப்போம்.

இப்போ மேலே விடு.

இனி வளைவாகக் கொண்டு போ.

இனிப் பின் பக்கமாக எடு.

சரி அப்படித்தான்.

ஏதும் தகராறு செய்தால் ஒயிலைக் கொஞ்சம் கவனி.

கொஞ்சம் நில்லு.

சரி இனித் திருப்பு பார்ப்போம்.

மெதுவாகத் திருப்ப வேண்டும். கவனம்.

அவசரப்பட்டால் வீணுகிவிடும்.

எது?

(விடை: 3-ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mrs. டாமோடிரன்



Mrs. டா: டார்லிங்!

Mr டா: யேஸ் டார்லிங்!

Mrs. டா: அருந்ததி நட்சத்திரம் ஒரு பொப்பியூலர் டமில் பிலிம் ஸ்டார் தானே?

Mr. டா: யேஸ் யேஸ்.

Mrs. டா: நாங்க இன்டியா போனால் அருந்ததி நட்சத்திரத்தையும் பார்த்து வருவமா?

Mr. டா: வை நொட்?

Mrs. டா: தாங் யூ டார்லிங்.

## பெற்றால்தான் பிள்ளையா?

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யாவும் துறந்தவரே துறவிகள். துறவிகளாயினும் மனிதர்தான். பட்சிகளினால் வளர்க்கப்பட்டு காட்டினிலே கண்டெடுக்கப்பட்டவள் தான் சகுந்தலை. சகுந்தலை கண்வரினால் கண்டெடுக்கப்பட்டு வளர்ந்து பூப்பெய்தி ஆசிரமத்தில் தோழிகளுடன் வாழ்ந்தாள். வேட்டைக்கு வந்த துஷ்யந்தனிடம் மனதைப் பறி கொடுத்து காந்தர்வ மணம் புரிந்தாள். போன துஷ்யந்தன் போனவன் தான். வரவேயில்லை. விஷயம் முற்றியதையறிந்த கண்வரிஷி மகளை துஷ்யந்தனிடம் அனுப்ப ஏற்பாடு செய்கிறார். காட்டையும், தோழிகளையும் விட்டுப் பிரிந்து பயணத்துக்கு ஆயத்தமான சகுந்தலையைக் கண்ட கண்வர் அழுதேவிட்டார். ஐம்புலனையும் வென்ற மகாயோகி கண்வரே அழுதால்? வனம் அழுதது. முனிவரின் சீடர் அழுதனர். விலங்குகள் அழுதன. கண்வரிஷி கூறுகிறார்: ''சகுந்தலை என் வளர்ப்பு மகள்தான். பெற்று எடுத்த பெண்ணல்ல. ஆனால் அவள் என்னை விட்டுப் பிரியும் போது பெற்ற தகப்பன் தன் மகளைப் பிரியும் போது எப்படி உணர்ச்சியும் பாசமும் கொண்டு விடுவானோ அதையே நான் அடைகிறேன். பெண்ணைப் பெற்றவன் சரி, பெறாதவன் சரி தன்னிடம் பெண் இருந்தால் உலகுக்கு அவன் ஒரு கடனாளிதான்.''

(காளிதாசனின் வடமொழிக் காவியமான அபிக்ஞான சாகுந்தலத்திலிருந்து)

பா. மனோரமா
கிராண்பாஸ்

பிள்ளைக் குரங்கு: அம்மா, எங்களிலிருந்துதானே மனிதர்கள் தோன்றினார்கள்?

தாய்க் குரங்கு: வெளியிலை சொல்லாதை. வெட்கக்கேடு!

— சசி

(2-ம் பக்க விடை)

(புதிதாக வந்த மனைவிக்குக் கணவன் தோசை சுடப் பழக்கியது.)

மைனர் மச்சான் — மாயன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல ரசம்

## சொன்னது நீ தானா?

பிரபல சமூக சேவையாள ரும் சமயத் தொண்டருமான ஒருவர் ஒரு கிராமத்தில் காலமானார். அவருடைய இரங்கற் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்தனர் அவ்வூர் மக்கள். பேச வந்தவர் ஒரு பெரிய ஆங்கில அறிவு பெற்ற புள்ளி. வெளி நாட்டில் படித்துப் பட்டம் பெற்ற அவர் தடுமாறிக் கொண்டே தமிழில் பேசினார். அருகிலிருந்த தலைவர் அவரிடம் இரகசியமாகக் கூறினார் ''அவர் மறைந்தது மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும் என்று இடையிடை 'பேரிழப்பு' என்ற வாக்கியத்தைப் பின்னிப் பேசினால் போதும்' என்று. அந்த ஆங்கில அறிவு மட்டும் பெற்ற அந்தத் தமிழ் மேதை பேசினார்:-

'அவர் மறைவு உங்கட்கு ஒரு பேரிழப்பாகும். அவருடைய நினைவாக நீங்கள் அன்னாருக்கு ஒரு நிதி சேர்த்து அவருடைய குடும்பத்தாருக்குக் கொடுத்தால் அது ஒரு பேரிழப்பாகும்.'

—ஃ—

## பார்த்தசாரதி யென்றால்?

பாரதச் சருக்கம் பற்றிய பாடமொன்றில் மாணவன் ஒருவனிடம் கீழ்க்கண்டவாறு கேள்வி கேட்கப்பட்டிருந்தது:-

பார்த்தசாரதியென்று யாருக்குப் பெயர்?

மாணவன் அளித்த விடை:-

பஸ்ஸுக்கு நான் நின்ற போது பஸ் வந்ததும் நிற்பாட்டும்படி சைகை செய்தேன். சாரதி என்னைப் பார்க்காமல் போய்விட்டார். அடுத்த பஸ் வந்ததும் அதே மாதிரி சைகை செய்தேன். அந்த பஸ்ஸின் சாரதிதான் என்னைப் பார்த்தார். பஸ்ஸும் நின்றது. எனவே இவர்தான் பார்த்தசாரதி. மற்றவர் பார்க்காத சாரதி.


—ஃ—

## வாரியார் காட்டிய முகபாவம்

கொழும்பு ஜிந்துப்பிட்டி கோவிலில் வாரியார் அவர்களின் பிரசங்கம் ''வள்ளுவரும் வாசுகியும்'' என்பது பற்றி நடந்தது வள்ளுவர் உண்ணும்போது வாசுகி அன்பாகவும் அடக்கமாகவும் உணவு பரிமாறுவார். சிறு சாதம் கீழே விழுந்தாலும் அதை எடுத்துக்கொள்ள ஊசியும் ஓடும் கூட வள்ளுவரின் அருகில் வைக்கப்பட்டிருக்கும். ஆனாலும் மனைவி பரிமாறும்போது ஒரு சாதமேனும் சிந்துவதில்லை. மனைவி அடக்கமும் பணிவாகவும் பரிமாறும் போது எப்படிச் சாதம் சிந்தும்? அதனால் கணவனுக்கும் எவ்வளவு சந்தோஷம் உண்டாகும் தெரியுமா? மனைவி கையால் உண்பதும் ஒரு ஆனந்தம்தானே? அதைவிட்டு சிலர் ஓட்டலில் சாப்பிடுகிறார்கள். ஓட்டலில் சாப்பிடும்போது அன்னத்தை இலையில் கரண்டியால் தட்டும்போது அதன் வேகமும் சப்தமும் தெரியும்தானே? அதே சமயம் கீழே சிதறும் அன்னத்துடன் அவசரமாக தடபுடவென்று அன்னத்தைத் தட்டும் சர்வரின் முகத்தையும் பார்க்கவேண்டுமே என்றுவிட்டு முகபாவத்தையும் வாரியார் காட்டியதும் சபையில் சிரிப்பும் கரகோஷமும் உண்டானது. வாரியார் விடாமல் ''அப்படியானால் இனிமேல் வீட்டிலே தான் சாப்பிடுவீர்கள் என்று தெரிகிறது கைதட்டியதிலிருந்து'' என்று போட்டார் ஒரு போடு.

—ஃ—

தொகுப்பு: ச. ரா. பா. சர்மா



ஆசிரியர்: முயலுக்கு மூன்று கால்.

மாணவன்: இல்லை... சார்...... நாலு கால்.

ஆசிரியர்: முட்டாள்...... உயர் பதவியிலிருப்பவர்கள் சொல்வதற்கெல்லாம் ஆமா போட்டு பழக வேண்டும். அப்போது தான் அவர்கள் உயர்ச்சி தருவார்கள்.

— அதிமதுரம்



ஒருவர்: ஏன் முகத்திலே கவலை?

மற்றவர்: பெரிய பாவம் செய்தவன் நான்.

ஒருவர்: ஏன்?

மற்றவர்: உத்தியோகம் தான் வருகுதில்லை. உத்தியோகம் பார்ப்பதாகக் கனவு கூட வருகுதில்லையே.

— ஜோக்கிரட்டீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ. பத்மகாந்தன், பிரதான வீதி, நெடுங்கேணி.

கே: தங்களுக்குச் சீர்திருத்த வாதியைப் பிடிக்குமா? புரட்சி வாதியைப் பிடிக்குமா?

ப: சீர்திருத்தப் புரட்சி வாதியைத்தான் பிடிக்கும்.

ஃ

பொ. கலைச்செல்வி, ஏழாலை.

கே: இ. போ. ச. பஸ்களைப் பற்றி தங்கள் பொதுவான கருத்து என்ன?

ப: எருமை மாடு தண்ணீரைக் கண்ட இடத்தில்தான் படுக்கும். இ. போ. ச. பஸ்சோ எல்லா இடங்களிலும் படுக்கும்.

ஃ

நயீமா அன்வர், பிரீ காஸல், முஸ்லீம் வீதி, திக்குவல்லை.

கே: பாட்டாளிகளின் உழைப்பும், முதலாளிகளின் சுரண்டலும் எதைப் போன்றது?

ப: தேனீயைக் கொன்று தேனெடுப்பதைப் போன்றது!

ஃ

செல்வி நிம்தாஸ் நஸ்ரூதீன், சுரையா மன்சில், வியாங்கல்லை.


கே: வறுமை, பெருமை, பொறுமை ஆகிய இம் மூன்றிலும் பொல்லாதது எது?

ப: மூன்று கொல்லும் விஷங்களில் எது பொல்லாத விஷமென்று கேட்பதைப் போன்றது நங்கையே.

ஃ

செல்வி இலட்சுமி கந்தசாமி, சென் செபஸ்தியன் வீதி, கொழும்பு-12

கே: இரவில் கனவு காண்கிறேன். கனவு காண்பது நல்லதா?




## பரிசுக் கேள்வி

நகுலா குலசிங்கம், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

கே: நேற்றைய தமிழன் எப்படி இருந்தான்? இன்றைய தமிழன் எப்படி இருக்கிறான்? நாளைய தமிழன் எப்படி இருப்பான்?

ப: நேற்றைய தமிழன் திரைகடல் ஓடித் திரவியம் தேடினான். இன்றைய தமிழன் திரைப் படம் பார்ப்பதில் திரவியம் இழக்கிறான். நாளைய தமிழன் திரை மறைவில் மறைந்துவிடுவான்.

ப: வாழ்க்கை கால்நடையாக இருந்தால் கனவிலாவது பல்லக்கில் போவதாகக் காண்பது நல்லதல்லவா?

ஃ

அராலியூர்ச் சந்தர்

கே: மனிதர்களுக்கு இறப்பில்லாவிட்டால்...?

ப: இடுகாடுகளும் இருப்பிடங்களாகும்!

ஃ

பொ. கலைச்செல்வி, ஏழாலை.

கே: அரசியல்வாதிக்கும் எழுத்தாளனுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

ப: அரசியல்வாதி நாவால் வாழ்பவன். எழுத்தாளன் பேனாவால் வாழ்பவன்.

ஃ

எம். ஜே. எம். அன்வர் கான், மின்ஹாத் மகாவித்தியாலயம், திக்குவல்லை.

கே: மனிதனிடம் இருக்க வேண்டிய அதிசய குணம் என்ன?

ப: மனித குலத்தை அழிக்கும் அதிசய ஆயுதங்கள் செய்யாது மனித குலத்தை வாழ்விக்கும் அதிசய ஆக்க வேலைகள் செய்ய வேண்டும்.

ஃ

சி. மயில்வாகனம், போபெத்த, யெல்லோப்பிட்டிய.

கே: ஆண்களால் என்ன முடியாது?

ப: பெண்களைப் பார்க்காமல் இருக்க முடியாது.

ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். எம். ஸயுவான், சீன் ஹவுஸ், திக்குவல்லை.

கே: மனிதனில் ஒரு பாதி தெய்வம். மறு பாதி மிருகம். உங்கள் கருத்து?

ப: நித்திரையாயிருக்கும் போது தெய்வம்... விழிப்பாயி போது மிருகம்.

ஃ

எம். எம். அபூபக்கர், பெரிய கடை, மன்னார்.

கே: நடிகைக்கும் குடும்பப் பெண்ணிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: நடிகைக்கு ரசிகப் பெருமக்கள் மதிப்புண்டு. குடும்பப் பெண்ணிற்கு மக்கள் மதிப்புண்டு.

ஃ

எஸ். ஏ. ரசிக் சரீப், பேண்காம் பாடசாலை, அச்சுவேலி.

கே: நான் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இலகுவான வழி கூறும்.

ப: முன்னேறும் பாதை இலவம் பஞ்சால் அமைக்கப்பட்ட இலகுவான பாதையல்ல. முன்னேறும் பாதை முள் நிறைந்த பாதை.

ஃ

ஆ. மகேஸ்வரன், 35/7, சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.


கே: எப்படிப்பட்ட திரைப் படம் பார்ப்பது நன்று?

ப: மனிதனில் இருக்கும் மிருகத்திற்குத் தூபம் போடாது மனிதனில் இருக்கும் தெய்வத்திற்குத் தூபம் போடும் படங்களைப் பார்ப்பது நன்று.

ஃ

ச. கந்தசாமி, கொழும்பு-13.

கே: 'மனிதன் மாறவில்லை' என்பது உண்மையா?



ப: பொய். கட்சி மாறுகிறானே.

ஃ

ப. சிவகுமாரன், நல்லூர்.

கே: நாம் ஒவ்வொருவரும் நம் நாட்டிற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: நான் என்ற சுயநலம் அறுத்து நாம் என்ற பொதுநலம் பேண வேண்டும்.

ஃ

செல்வி ஏ. தீனா, கெஷயர் ஹவுஸ், மண்முனை, காத்தான்குடி.

கே: கடவுள் ஒரு நாள் உலகத்தைக் காண வருவாரா?

ப: அன்புள்ள உலகில் தான் ஆண்டவன் தரிசனம் கிடைக்கும். அணுக் குண்டு உள்ள உலகிலல்ல.

ஃ

செல்வி புஸ்பலீலா பெருமாள் பிள்ளை, தெமட்டகொட, கொழும்பு-9.

கே: மனம் நொந்து போயிருக்கிறேன். மருந்து கூறுவீரா?

ப: நாடு சுபீட்சம் பெற வீராங்கனைகள் தேவை. விம்மி அழும் பெண்கள் அல்ல.

ஃ

சி. முத்துக்குமாரு, உடுப்பிட்டி.

கே: கற்புள்ள பெண்ணைக் களங்கமுள்ளவளென்று அஞ்சுபவனைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: பவுண் தாலிக் கொடியைப் பாம்பென்று பயப்படும் பாவி.

ஃ

யோகேஸ்வரி சிவபாலன், புலோலி

கே: உலகம் உய்ய வழி கூறும்.

ப: மண்ணையும் மனதையும் பண்பு படுத்த வேண்டும். எல்லாம் உய்யும்.

ஃ

பரமேஸ்வரி பேரம்பலம், தெல்லிப்பளை.

கே: மகுடி அண்ணா! நீங்கள் ஏன் சினிமாக் கலையைத் தூற்றுகிறீர்கள்?

ப: பதரைத் தூற்றுவது முத்துக்களை எடுப்பதற்கல்லவா?

ஃ

மு. பேரின்பநாயகம், கரவெட்டி.

கே: தென்னகத் தமிழ்த் திரையில் நீங்கள் விரும்பும் நடிகர்கள் யார்?

ப: கான மழை பொழிந்த பாகவதரும், கருத்து மழை பொழிந்த கலைவாணரும்.

ஃ

வாசக நேயர்கள் கேட்கும் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் வரிசைக் கிரமமாக மகுடியார் பதில் அளிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மு. கணேசன், யாழ்நகர்.

கே: காதல் என்றால் என்ன?

ப: தென்னிந்தியத் திரைப்படங்களின்படி அது ஒரு சர்க்கஸ்.

சி. சோமசுந்தரம், வவுனியா.

கே: 'பணம் பந்தியிலே...' உண்மைதானா?

ப: போய்யா... பணம் வங்கியிலே.

ஃ

சி. பாலசுந்தரம், காரைநகர்.

கே: மகுடியாரே! உங்களை கர்நாடக சங்கீதப் பிரியரெனக் கேள்விப்பட்டேன். உங்களுக்குச் சினிமாப் பாட்டும் வருமா?

ப: மஜா மஜா மஜா
மஜா மாப்பிளே
மயக்கிடவா உன்னை
ஒரு பாட்டிலே

ஃ

தமயந்தி திருநாவுக்கரசு, மல்லாகம்.

கே: மகுடி அண்ணா... வாழ்க்கையும் ஒரு கலைதானே?

ப: ஆம்...... பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் ஆடி முடிக்கும் நாடகக் கலை.

ஃ

எஸ். அந்தோனிப்பிள்ளை, குருநகர், யாழ்ப்பாணம்.

கே: அறிவு படைத்தவர்கள் பொன்னைப் போற்றுவதில்லை. மண்ணைப் போற்றுகிறார்களே. ஏன்?

ப: இறந்த பின்பு மண்ணல்லவா எமது மஞ்சம். பொன்னல்லவே.

ஃ

பா. கனகசுந்தரம், வரணி.

கே: பல பெண்களுக்குக் காதல் கடிதம் எழுதுபவனைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: பல உத்தியோகத்திற்கு அப்பிளிக்கேஷன் போட்ட பழக்கம் தம்பி.

ஃ

மு. சிவநாதன், ரத்மலானை.

கே: படித்தவனுக்கும் விவேகிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: படித்தவன் எப்படித் தனக்கு உத்தியோகம் எடுக்க முடியும் என்று சிந்திப்பான். விவேகி எப்படிப் பத்துப் பேருக்கு உத்தியோகம் கொடுக்க முடியும் என்று சிந்திப்பான்.

ஃ

ச. சண்முகநாதன், கண்டி.

கே: கறுப்பு மார்க்கட் வியாபாரம் செய்வது எதற்காக?

ப: moneyதன் ஆக இருப்பதற்காக.

ஃ

க. தங்கராசா, பரந்தன்.

கே: இளமை நினைவுகள் இனிமையாக இருப்பது ஏன்?

ப: வீணை நரம்புகள் தளராமல் இருக்கும் காலத்தில் எழும் கீதம் இனிதல்லவா? என்றும் காதில் இனிது ஒலிக்கும்.

ஃ


ப. நாகராசா, சண்டிலிப்பாய்.

கே: எப்படியான ஊருக்கு அழகு பாழ்?

ப: கோழாறுள்ள ஊருக்கு அழகு பாழ்.

ஃ

---



மனைவி: எதுக்காக அந்த ஸாரியை வாங்கினீங்க?

கணவன்: பாட்டிக்கு!

மனைவி: (எரிச்சலுடன்) உங்கள் பாட்டிக்கு இந்த நைலக்ஸா?

கணவன்: அந்தப் பாட்டியல்ல. நாளை நடக்கப்போற ''பார்ட்டிக்கு'' என்று சொன்னேன்.

—மஹஇ—

---

இன்ஸ்பெக்டர்; நடு இரவுப் படுகொலையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

திருடன்: அது மர்மக் கதை மன்னன் மன்னார்சாமி எழுதிய மர்ம நாவல், ஸார்!

இன்ஸ்பெக்டர்: !!!

—மஹஇ—




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகடத் ——————→ துணுக்குகள்

நீதிபதி: அந்த வீட்டில் அத்து மீறிப் பிரவேசித்திருக்கிறாய்.... இதை உன்னால் மறுக்க முடியுமா...?

திருடன்: ஐயா... அவர்கள் வீட்டிலே ''தங்கள் வரவு நல்வரவாகுக'' என்று எழுதி இருந்தார்கள். அதுதான் நான் அந்த வீட்டிற்குள் போனேன்.

நல்லை - காந்தன்




சாப்பிட வந்தவர்: இன்றைக்கு என்ன ஸ்பெஷல்?

சர்வர்: ஜம்போ ஜெட்டினி!

சாப்பிட வந்தவர்: ஜெட்டை எப்படிச் சாப்பிட முடியும்?

சர்வர்: ஜம்முன்னு உள்ளே போற சட்டினி இருக்குதென்று சொன்னேன். அதுதான் ஜம்போ ஜெட்டினி!

— மஹறி



நண்பன்; உன்னைக் காதலிக்கவில்லையென்று அவள் சொன்னபோது ஆயிரம் சம்மட்டிகளால் தலையில் யாரோ அடிப்பதுபோன்ற பிரமையல்லவா உனக்குத் தோன்றியது?

மற்றவன்: இல்லவே இல்லை...... ஒல்லித் தேங்காய் உச்சந் தலையில் விழுந்த மாதிரி இருந்தது.

அனுப்பியவர்:
நல்லை-காந்தன்

## சிகரட் சிரிப்பு


உள்ளூர் சுருட்டு: ஏன் நண்பா ஆழ்ந்த யோசனையில் இருக்கின்றாய்,

சிகரட்: ஒன்றுமில்லை. எல்லாம் இந்த மனிதனைப் பற்றிய சிந்தனைதான்.

உ. சுருட்டு: அப்படித் தான் என்ன ?


சிகரட்: தினமும் மனிதன் தன் சிந்தனை (மூளை) குழம்பாமலிருக்க என்னை அணு அணுவாக நெருப்புக்குப் பலியாக்கிகுறான். ஆனால் நானோ அவனுடைய ஆயுளைக் குழப்பிக் குறைத்துக் கொண்டிருக்கின்றேன்.

''அனலை அருள்''



ஆசிரியர்: ராமு ''முற்பகல் செய்யின் பிற்பகல் விழையும்'' இதற்கு உதாரணம் ஒன்று சொல்லு ...?

ராமு: ''ரெண்தேர்டி சோவிலே'' அடிகொடுத்த என் நண்பன் ''ரூதேர்டி சோவிலே'' நல்லாக வாங்கிக் கட்டிக்கொண்டான்......!!



ஒருவர்: நீங்கள் ஏன் காசி யாத்திரை வருகிறீர்கள்

மற்றவர்; பிள்ளைவரம் கேட்பதற்கு. நீங்கள் எதற்கு வருகிறீர்கள்.

ஒருவர்: பிள்ளைவரம் போதும் என்று கும்பிடுவதற்கு.

— ஜோக்கிரட்டீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது பரிசு பெறும் சிறுகதை: 1

# * ஞானோதயம் *

— இலதலை நடராஜன்

அம்மா இன்றைக்கு நிச்சயம் வருவாள் என்று அவனுக்குத் தெரியும். தன்னை இறுதித் தடவையாகப் பார்ப்பது குறித்து அவள் எவ்வளவு வேதனைப்படுவாள் என்பதும் அவனுக்குத் தெரியும்.

அவனுக்காகத் தான் பட்ட சிரமங்களை அம்மா அடிக்கடி கூறிக்கொண்டிருப்பதை அவன் நினைத்துக்கொள்கிறான். தன்னுடைய சிரமங்களுக்கான பெறுபேறுகளை அவள் எந்த விதத்தில் எதிர்பார்த்திருப்பாள் என்பது பற்றி அவன் இப்போது சிந்திக்கிறான்.

தன் மகன் ஊரார் மெச்சும் படியான ஒரு பிரபலஸ்தனாய் விளங்க வேண்டுமென்று அம்மா ஆசைப்பட்டிருப்பாள். தன்னுடைய ஆசைகள் நிர்மூலமானதையிட்டு அம்மா இப்போது மிகுந்த வேதனைப்படுவாள். தன்னுடைய ஆசைகளில் அவன் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டதாக அம்மா நினைப்பாளோ?

அவன் நெற்றியை அழுத்தித் தேய்த்துக்கொள்கிறான். அம்மா அப்படி நினைத்தால ஒரு விதத்தில் அது நியாயமானதுதான். அம்மா அவனைத் துன்பங்களின் நிழல் படாமல் வளர்த்திருக்கிறாள். அவன் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதற்காக நிறைய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறாள். அவனும் அம்மாவின் விருப்பப்படி ஒழுங்காகப் படித்தான். நல்லவனாக வளர்ந்தான்,

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குப் பிறகு அவன் முற்றிலும் மாறிப்போனான். அந்த மாற்றத்திற்கான காரணம் அவனுடைய நண்பர்கள்தாம் என்று அம்மா குறைப்பட்டுக்கொண்டாள்.

அவனுடைய நண்பர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்திற்காக சமூகத்தால் — அதன் கணிப்புகளின்படி — ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். அப்படிப் பட்ட அவர்களுடன் அவன் சேர்ந்தது பற்றி அம்மா மிகவும் வருத்தப்பட்டாள்.

அம்மா அவனைத் திட்டமாட்டாள். கண்டித்தாலும் அதில் ஓர் ஆதாரமான பாவம் இழையோடும். அம்மா என்ன சொன்னாலும் அவன் தலை குனிந்தவண்ணம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்பான். சில வேளைகளில் அம்மா பேசுவது அவன் செவிகளிற் கேட்டும் கேளாதது போல் இருந்துவிடுவான், அந்தக் கணங்களில் அவன் மனம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டிருக்கும்.

அவனும் அம்மாவிடம் அளவிலா அன்பு கொண்டிருந்தான். ஆனாலும் அவன் மாறிப் போனான். அம்மாவுக்கு விருப்பம் இல்லாத — அவளுடைய எண்ணங்களுக்கு எதிரான வழிகளில் நடக்கத் தொடங்கிவீட்டான். இது அம்மாவுக்கு வேதனையைத் தருகிற விஷயம்தான்.

சமீப காலமாகத் தனக்கும் அம்மாவுக்கும் இடையில் கனமான ஒரு திரை விழுந்துவிட்டிருப்பதாக அவன் சில சமயங்களில் எண்ணுவதுண்டு. ஆனாலும் அம்மாவிடம் அவன் கொண்டிருந்த அன்பு அணுவளவுகூடக் குறையவில்லை. அவனைப் பொறுத்தவரையில் அம்மாவிடம் எந்தக் குறையும் இல்லை.

தனக்கும் அம்மாவுக்கும் இடையில் திரை விழுந்துவிட்டிருப்பதாகத் தான் நினைப்பது சரியா அல்லது தவறா? என்பது பற்றி அவன் நிறையச் சிந்தித்திருக்கிறான். இந்த நினைவுகள் தன்னுள் எழ சமூகம் ஏதோ ஒரு வகையில் நிர்ப்பந்தித்திருப்பதாக அவன் நினைக்கிறான்.

அம்மாவின் வாழ்க்கையில் ஏதோ இரகசியங்கள் இருப்பதாக சமூகம் கருதுகிறது. சமூகத்தின் ஊனமான அங்கங்கள் அதை அவனுக்குப் பல சமயங்களில் மறைமுகமாகப் புலப்படுத்தியிருக்கின்றன.

இரகசியங்கள்!

சமூகம் இரகசியம் என்று கருதுகிற விஷயங்களே ஒரு சிலரைப் பாதிப்பவையாகத்தான் இருக்கின்றன. கொஞ்சக் காலத்திற்கு வாழ்ந்து மரண்டுபோகும் மனிதரின் வாழ்வில் அப்படி என்ன இரகசியங்கள்?

தான் இரகசியம் என்று கருதுகிற விஷயங்களை அந்தச் சமூகமே உடைத்துக் காட்டுகிற பொழுது இரகசியம் என்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுகிறது. அர்த்தம் இல்லாவிட்டாலும் அதனால் அனர்த்தங்கள் நிறைய விளைகின்றன.

தன்னைப்பொறுத்தவரையில் அவை அனர்த்தங்கள் தாம் என்

---

பஸ் கண்டர்: நீங்க அனுராதபுரம்தானே?

பிரயாணி: இல்லை. நான் வல்லிபுரம்.

— இரா. தர்மலிங்கம்,
விசுவமடு, பரந்தன்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது அவனுக்குத் தெரியும். அந்த அனர்த்தங்களில் இருந்து தன்னைக் காத்துக் கொள்கிற வலு தனக்கு இல்லாமல் போய்விட்டதே என்று அவன் இந்தக் கடைசி நேரத்தில் நினைக்கிறான்.

இவற்றுக்கான மூல காரணங்களை அம்மா அறிவாளா?

தான் அந்தக் காரணங்களை அறிந்து கொண்டுவிட்டதாக அவன் நினைக்கிறான். சில வேளைகளில் தான் கொண்டுள்ள கருத்துக்கள் அர்த்தமற்றவையோ என்ற எண்ணம் வந்துவிடுகிறது.

திரிசங்கு சுவர்க்கத்தின் தெளிவற்ற சிந்தனைகள்!

இந்த வாழ்க்கைதான் தனக்காக நிர்ணயிக்கப்பட்டதா? தான் வேறொரு வாழ்க்கையை வாழ்ந்திருக்கக் கூடாதா?

அவனுக்கு இந்த நிர்ணயம் ஒரு நிர்ப்பந்தமாகத்தான் தோன்றியது. இந்த நிர்ப்பந்தத்திற்குக் காரணமானவர்களை எண்ணவே அவனுக்குக் கசந்தது. சமூகத்தின் தாக்குதல்கள் தன்னையும் அம்மாவையும் பாதித்துவிட்டதாக அவன் சில வேளைகளில் நினைக்கிறான்.

அம்மா இதைப்பற்றி என்ன நினைக்கிறாள்? அவனுக்குக் குழப்பம்தான் மிஞ்சுகிறது. அவன் மெல்ல எழுந்து இரும்புக் கதவுகளை நோக்கி நடக்கிறான்.

அவன் கதவின் கம்பிகளைப் பிடித்தவண்ணம் நிற்கிறான். ஒரு காவலரைப் பின்பற்றி அம்மா வருவது தெரிகிறது.

ஒரு முறை அவன் அந்தச் சிறையை அம்மாவுக்குக் காட்டிச் சொன்னான்: இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் இரண்டு இடங்களில் ஒன்று இந்த வெலிக்கடைச் சிறைச்சாலை. அதைக் கேட்டுவிட்டு அம்மா அந்தச் சிறையை உறுத்துப் பார்த்தாள்.

தான் இந்தச் சிறைக்குள் வருவது பற்றி அன்று அவன் சிந்திக்கவில்லை. இன்று உள்ளே இருக்கிறான். அவனைக் காண அம்மாவும் வந்து கொண்டிருக்கிறாள். அம்மா வந்துவிட்டுப் போய்விடுவாள். அவன் இந்தச் சிறைக்குள்ளேயே மாண்டுவிடப் போகிறான்.

அம்மா அருகில் வந்துவிட்டாள். அவன் அம்மாவைப் பார்க்கிறான். அம்மாவின் முகம் மிகவும் முதிர்ச்சி அடைந்துவிட்டிருக்கிறது. அந்த முதிர்ச்சி மிகக் குறுகிய கால எல்லைக்கு உட்பட்டது என்று அவனுக்குத் தெரியும். தன்னைப் பற்றிய சிந்தனைகளும் கவலைகளும் தாம் அந்த முதிர்ச்சிக்குக் காரணம் என்பதை அவன் அறிவான்.

அம்மா அவனை நெருங்குகிறாள். காவலர் அப்பால் போய்விட்டார்.

''வாருங்கள் அம்மா''




புடவைத் தினுசுகளுக்கு

'சிங்காரம்ஸ்'



தங்க நகைகளுக்கு

டைமா நகை மாளிகை

செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 20875




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அம்மாவை அழைக்கிறான். அந்தக் குரலில் எதுவிதமான உணர்வோட்டங்களையும் உணரமுடியவில்லை. கம்பிகளின் ஊடாக அம்மா அவனுடைய கரங்களைப் பற்றுகிறாள். அவன் தலை குனிந்தவண்ணம் நிற்கிறான்.

''ராஜா!''

அம்மா அவனை எப்போதும் அப்படித்தான் அழைப்பாள். அவன் மெல்லத் தலையை நிமிர்த்துகிறான். அம்மாவின் கண்கள் கலங்கியிருக்கின்றன.

''அம்மா! எனக்கென்று இந்த உலகத்தில் இருப்பவர் நீங்கள் ஒருவர்தான். ஆனால் —

என் நிலைக்காக நானே அழாதபோது நீங்கள் ஏன் அழ வேண்டும்!''

அவன் கம்பிகளுக்கிடையில் முகத்தைப் பதித்தவண்ணம் சொல்கிறான்.

''ராஜா, உனக்காக நான் அழாமல் வேறு யார் அழப்போகிறார்கள். உன்னை இந்த நிலையில் காண என் மனம் தாளவில்லை.''

அம்மாவின் கண்கள் நீரைப் பொழிகின்றன.

''ராஜா கொலை செய்கிற அளவுக்கு மாறிப் போவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.''

''அம்மா, நீங்கள் சொல்வது தவறு என்று நான் சொல்லவில்லை. நான் அவளை முழுக்க நம்பியிருந்தேன். கடைசியில், இந்த விஷயத்தில் தனக்கு விருப்பமில்லை என்று சொன்னாள். அந்த அளவில் அவள் நின்றிருக்கலாம். என்னைப்பற்றி விமர்சிக்கத் தொடங்கினாள். அவள் எனக்குக் கிட்டாமல் போகிறாள் என்பதற்காக நான் வருத்தப்படவில்லை. அவள் எல்லை மீறிப் பேசினாள்; அது எனக்குக் கொதிப்பை ஏற்படுத்திவிட்டது. அந்தக் கொதிப்பில்—''

அவன் முடிக்காமல் நிறுத்திவிட்டு அம்மாவைப் பார்க்கிறான். அம்மாவின் தலை தாழ்ந்திருக்கிறது. அவனுடைய பார்வை அம்மாவின் கால்களில் பதிந்தது. அந்த அழகான பாதங்கள் —

அம்மா முன்பு எவ்வளவு அழகாக இருந்தாள். விடுதியில் தங்கிப் படித்துவிட்டு விடுமுறைக்காக வீட்டுக்கு வந்து அம்மாவுடன் கழித்த ஆனந்தமான அந்த நாட்களைப் பற்றிய நினைவின் இலயிப்பில் அவன் சில கணங்கள் ஆழ்ந்துவிடுகிறான். அந்தச் சில நாட்களில், அம்மாவின் பாசம் மிகுந்த — பரிவுமிக்க — அரவணைப்பிலும் சீராட்டலிலும் திக்குமுக்காடிப் போயிருக்கிறான் அவன்.

மீண்டும் விடுதிக்குத் திரும்புகிறபோது அவனுள்ளத்தில் வெறுமை மிகுந்துவிடும். அவன் விடுதிக்குத் திரும்புவதற்காகத் தனியாக ஒரு வண்டியை ஏற்பாடு செய்துவிட்டு, அந்த வண்டிக்குள் அவன் இருக்க, அம்மா வெளியே நின்று வண்டிக் கதவின் மீது கைகளை ஊன்றிய வண்ணம் அவனுக்கு அறிவுரை கூறுவாள்.

அப்போது அம்மாவுக்கு அடங்கின பிள்ளை அவன். 'இப்படி இருக்க வேண்டும், அப்படிச் செய்யவேண்டும்' என்று அம்மா சொல்ல, அவன் தலையை வேகமாக ஆட்டி அம்மாவின் வார்த்தைகளை ஆமோதிப்பான்.



---

## குடும்பப் போக்கு

மனைவி: என்னங்க, இன்றைக்கு மனைவி படத்துக்குப் போவோமா?

கணவன்: அது வேண்டாம். கணவன் படத்துக்குச் செல்வோம்.

மகள்: அம்மா! கன்னிப் பெண் ஓடுதாம். அதற்கு...

மகன்: நீ சும்மா இரு. அப்பா! காதலிக்க நேரமில்லை பார்க்க போவோமா?

குழந்தை: ஒன்றும் வேண்டாம். குழந்தைக்காக படம் பார்ப்போம்.

கணவன்: ஒருவருமே போக வேண்டாம். எல்லோரும் வீட்டில் இருங்கள். நான் கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி படத்துக்குப் போகிறேன்.

— க. பத்மாவதி

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிமயமாக இருக்க



ஏன் உன் கணவர் கோபித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்?

'ஜெகஜோதி' பற்பொடி வேணுமாம். கடைக்குப் போய் அதை வாங்கி வந்து பல் தேய்த்த பிறகுதான் காப்பியே சாப்பிடுவாராம்.




ஆசிய ஜோதி யார்?

பண்டித ஜவஹர்லால் நேரு

வெறிகுட்! ஜெகத்துக்கே ஜோதி?

பற்களை தூய்மையாக வைத்து வெண்ணிறப்படுத்தி உறுதிப்படுத்தும் ஜெகஜோதி பற்பொடியே!

சபாஷ்! நூறு மார்க்குகள்.



''குருதேவா தங்கள் ஆன்ம ஜோதியை ஜொலிக்கச் செய்ய குருதெனிய ஜெகஜோதியைக் கொண்டு வந்திருக்கிறேன் பிரபோ!''


கொண்டுவா இங்கே!

இன்றுதான் என் தவத்தின் பயனை அடைந்தேன்.




ஆகா! என்னே உன் அழகு! தக்காளிப்பழ மேனி, மூன்றும் பிறை நெற்றி, மயக்கும் விழி, முத்துப்போன்ற பல் வரிசை.

அப்படியல்ல என் கண்ணாளா ஜெகஜோதி பற்கள் என்று சொல்லுங்கள்.



என்ன உங்க வயது 102 என்கிறீர்கள் அதெப்படி? ஒரு பல்கூட விழாமல் உறுதியாக இருக்கின்றது. சொல்லும் சுத்தமாக இருக்கின்றது.

'ஓ'...அதுவா நான் உபயோகிப்பது ஜெகஜோதி பற்பொடியை. அதுதான் பல்லையும் காக்கும் உயிர்த் தோழன்.



முதலாளிகிட்ட போய் பல்லைக் காட்டினால் சம்பளம் கூட கொடுப்பார்னியே. திட்டு தான் கிடைச்சது போ!

ஐய்ய! உன் காவி படிந்த கறை படிந்த பல்லையா காட்டுவது? ஜெகஜோதி பற்பொடியைப்போட்டு நல்லாத் தேய்ச்சு விட்டுப் பிறகு போய்ப் பார்.

# ஜெகஜோதி அன் கொம்பனி

**குருதெனியா, கண்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைக்கு வார்த்தை 'ராஜா' என்று அம்மா விளிக்கிறபோது, அந்த அன்பில் அவன் மெழுகாகக் கரைந்துபோவான். ஆனால், அந்த அன்பு அவனுள் நிலைத்த அளவிற்கு அறிவுரைகள் நிலைக்கவில்லை. இறுதியில் அம்மாவுக்கு வேதனைதான் மிகுதி.

அவனுடைய கன்னங்களில் கண்ணீர் கோடிடுகிறது. அழக்கூடாது என்ற அவனுடைய உறுதி உடைந்துவிடுகிறது. அம்மா அவனுடைய தலையை வருடிவிட்டுக்கொண்டே சொல்கிறாள்:

''ராஜா! உன்னை இந்த நிலையில் பார்க்கும் பாவியாகிப் போனேன். நான் பெற்ற பிள்ளை எனக்கு முன்னால் —

அம்மா முடிக்கவில்லை. விசும்பி அழுகிறாள். அவனுக்கும் அழுகை வந்துவிடுகிறது.

பிள்ளையோடு அம்மாவும் பிள்ளையாகி அழுகிறாள். அழுகையும் இடையே பேச்சுமாக பிரிவின் கணங்கள் நெருங்கிவிட்டன.


அம்மா புறப்படுகிறாள்.

அவன் முதன் முதலாகவும், இறுதித் தடவையாகவும் அம்மாவின் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறான்.

அம்மா அழுதவண்ணம் நேரமாகிவிட்டதை அறிவிக்க வந்த காவலரைப் பின்தொடர்கிறாள்.

அவன் புறங்கையால் கண்களைத் துடைத்துக் கொள்கிறான்.

தான் அவளைக் கொலைசெய்ததற்கான காரணங்களை அவன் மீண்டும் நினைக்கிறான். அம்மாவிடம் அவன் உண்மையான காரணத்தைக் கூறவில்லை. நீதிமன்றத்தில்கூட அந்தக் காரணத்தை அவன் கூறவில்லை.



ஒருவர்: தமிழ் இனத்தைத் தமிழ் சினிமா கெடுத்துப் போடும் போல இருக்கு.

மற்றவர்: என்ன கெடுத்துப் போடும் போல இருக்கு! இனிமேல் கெடுப்பதற்கு ஒன்றுமே இல்லை.

— அதிமதுரம்

அவள் தன்னைப்பற்றித் தரக்குறைவாகப் பேசியதை அவன் பொறுத்துக் கொண்டான். அந்தச் சந்தர்ப்பத்தில் அம்மாவைப் பற்றி அவள் பேசியதுதான் அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டது. அவனுடைய ஆத்திரம் வளர்ந்து தணிந்தபோது அவள் உயிரை இழந்துவிட்டிருந்தாள்.

அவன் பல பெண்களுடன் பழகியிருக்கிறான். அதெல்லாம் அம்மாவுக்குத் தெரியாது. இறந்துபோன அந்தப் பெண்ணை அவன் மிகமிக நேசித்தான். அவளும் அவனோடு அப்படித்தான் பழகினாள். அவனுடைய சகவாசங்களைப் பொறுத்து அவளுக்கு நீண்ட நாட்களாகத் தெரியாது. தெரிந்த பிறகு அவள் அவனை அடிக்கடி கண்டித்திருக்கிறாள். அப்படிக் கண்டிக்கும் உரிமையை அவன் அவளுக்கு வழங்கியிருந்தான்.

அவளை மணந்து கொண்ட பிறகு தன்னுடைய நடத்தைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற உறுதி அவனிடம் இருந்தது. ஆனால், முடிவில் மற்றவர்களைப்போல அவளும் அவன் மனதைப் புண்படுத்திவிட்டாள். அதுவரை யாரும் அவனிடம் அப்படி நேரில் பேசியதில்லை.

அம்மாவின் வயிற்றில் அவன் இருந்தபோதே அவனுடைய அப்பா இறந்துபோனார். அம்மா அவனிடம் அப்படித்தான் சொல்லியிருக்கிறாள். வீட்டுச் சுவரில் அவருடைய புகைப்படம் ஒன்று எப்போதும் தொங்கிக்கொண்டிருக்கும். அப்பாவுக்கு நிறையச் சொத்துகள் இருந்தன. எல்லாம் அம்மாவுக்குச் சேர வேண்டியவை. அவற்றைப் பெறுவதற்காக அம்மா நிறையச் சிரமப்பட வேண்டியிருந்தது. கொஞ்சக் காலம் வறுமைப்பட வேண்டியும் இருந்தது. அவன் பொருட்டுத்தான் தான் அந்தச் சிரமங்களைச் சகித்துக் கொண்டு வாழ்ந்ததாக அம்மா அவனிடம் கூறியிருக்கிறாள். சட்டபூர்வமாக அப்பாவின் சொத்துக்கள் அம்மாவுக்குக் கிடைத்த பிறகுதான் அவளுடைய சிரமங்கள் நீங்கின.

அம்மா தனக்குச் சொல்லாத சில விஷயங்களையும் அவன் தெரிந்துவைத்திருந்தான்.

அவன் பிறந்த பின்பு அம்மா ஒருவரைத் தன் துணையாக ஏற்றுக் கொண்டிருந்தாள். அவர் பணத்திற்காகத்தான் அம்மாவை நாடியிருக்கவேண்டும். கொஞ்ச நாளில் அவர் அம்மாவை ஏமாற்றிவிட்டுப் பெரும் பணத்துடன் புறப்பட்டுவிட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு வேறொருவர் அம்மாவின் வாழ்வில் குறுக்கிட்டார். முடிவில் ஏமாற்றம்தான்.

சமூகம் நியதிகளென்று விதித்துவிட்ட வரம்புகளை மீற வேண்டிய நிர்ப்பந்தம் சிலருக்கு ஏற்படத்தான் செய்கிறது. இந்த நிர்ப்பந்தங்கள் எந்த அளவுக்கு இயல்பானவை என்பது அவனுக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைப் பொறுத்த வரை அவள் சமூகத்தின் பார்வையில் குற்றவாளியாகத்தான் தோன்றியிருக்க வேண்டும்.

அவன் படிப்பு முடிந்து வந்து ஊரில் புழங்கத் தொடங்கியது தான், அவன் வாழ்க்கை முற்றிலும் மாறக் காரணமாயிற்று. அவன் போன அநேக இடங்களில் அம்மாவைப்பற்றிய அவதூறான விஷயங்களைப் பலர் மறைமுகமாகப் பேசுவதை அவன் கேட்க நேர்ந்தது. அவனைக் கண்டு சிலர் இரகசியமாக ஏதோ பேசுவதை அவன் பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறான்.

அவர்கள் தன்னைப்பற்றி — அம்மாவைப்பற்றி என்ன பேசுகிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

அவனுடைய அப்பா இறந்த நீண்ட நாட்களுக்குப் பிறகு, அம்மா வேண்டுமென்றே அப்பாவை விஷமிட்டுக் கொன்றுவிட்டதாக ஒரு கதை தோன்றியிருந்ததையும் அவன் அறிய நேர்ந்தது. அதை அவன் நம்பவில்லை. நிச்சயமாக அம்மா அப்படிச் செய்திருக்கமாட்டாள்.

நடக்காதவைகளும் நடந்ததாகக் கற்பித்துக் கூறப்பட்டன.

தந்தையை அறியாதவனைத் தன்னைச் சமூகம் கருதுவதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தன்னுடைய தந்தை என்று அம்மா யாரைக் கூறினாளோ அவர்தான் தன் தந்தை என்று அவன் உறுதியாக நம்பினான்.

அந்த நம்பிக்கையை உடைத்தெறிவது போல ஊரார் பேசிய போது தனக்காகத் தானே கழிவிரக்கம் கொள்ளத்தான் அவனால் முடிந்தது.

அசுத்தமானது என்று தாம் கருதுவதைத் தாமே கிளறிவிட்டு முகர்வதில் இவர்களுக்கு என்ன லாபம்?

பலரும் தன்னை வெறுப்புணர்ச்சியுடன் பார்ப்பதாக அவனுக்குத் தோன்றியது. ஊராரின் பேச்சுக்களையும் பார்வைகளையும் அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவற்றிலிருந்து ஒதுங்கிப் போய்விட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. அம்மாவைப்பற்றி அவனால் தவறாக நினைக்க முடியவில்லை.

இந்த விஷயங்கள் அம்மாவைப் பாதிக்கவில்லையா என்பது பற்றி அவன் சிந்தித்திருக்கிறான்.

அம்மா இவற்றைப்பற்றி வருத்தப்படவில்லையே என்று எண்ணியபோது, அவள் இவற்றை அலட்சியம் செய்கிறாளோ என்று அவன் நினைத்தான்.

ஊரார் நினைப்பதுபோல் தான் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்று அம்மா நினைக்க வேண்டும். அதனால்தான் அவளால் கலக்கமின்றி இருக்க முடிகிறது என்று அவன் எண்ணினான்.

இந்த மனிதர்களின் முன்னால் தனக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலை அம்மாவுக்கு ஏற்பட்டிருக்காது என்று அவன் நினைத்தான். அதனால்தான் அந்த வெறுப்புகளிலிருந்து விலகிநிற்கத் தான் விரும்பியது என்று அவன் நினைத்தான்.

சமூகம் தன்னைப் புறக்கணிப்பதாக அவன் நினைத்தான்.

விளைவு!

ஏற்கனவே பல காரணங்களுக்காக அப்படிப் புறக்கணிக்கப் பட்டவர்களுடன் அவன் ஐக்கியமாகி விட்டான். அவர்களும் தன்னைப்போல ஏதோ ஒரு வகையில் சமூகத்தின் புறக்கணிப்புக்கு இலக்கானவர்கள் என்ற எண்ணம் அவனுக்குத் திருப்தியளித்தது. அதற்குப் பிறகு அவன் போக்கிரியாகிவிட்டான் என்று ஊரில் பேசப்பட்டது. அது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய நண்பர்களுக்குத் தன் பணத்தைச் செலவிட்டுக் கொண்டு அவன் மனம் போன படி வாழ்ந்துகொண்டிருந்தான். இந்த வாழ்க்கை தனக்குத் திருப்தியளிக்கிறதா என்ற சந்தேகம் சில வேளைகளில் அவனுள் தோன்றியதுண்டு. அந்த வெறுப்பான பார்வைகளிலிருந்து விடுபட முடிகிறதே என்ற எண்ணம் எழுந்த போது, அந்த வாழ்க்கையில் அவன் மேலும் ஸ்திரப்பட்டுப் போனான்.

இடையில் அந்தப் பெண் அவனுடைய வாழ்க்கையில் குறுக்கிட்டாள். மற்றப் பெண்களைப் போலல்லாமல் அவள் கொஞ்சம் நல்லவளாக இருந்தாள். அவளை மணக்கும் எண்ணம் அவனுக்கு இருந்தது. மணமானால் வாழ்க்கை மாறிவிடும் என்றொரு நப்பாசை.

அம்மாவும் சம்மதிப்பாள் என்று அவன் நினைத்தான். ஆனால் அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

ஊராரின் வெறுப்பிலிருந்து தான் ஒதுங்க நினைத்தது; அப்படி நினைத்து ஏற்கனவே ஒதுக்கி வைக்கப்பட்டவர்களுடன் தான் சேர்ந்தது; அதனால் தன் உள்ளத்திற்குத் திருப்தி ஏற்படுவதாக நினைத்தது யாவுமே தவறுதானோ என்று இப்போது அவன் எண்ணுகிறான்.

தன்னுடைய பலவீனங்கள் தாம் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டன என்று அவனுக்குத் தோன்றியது. இந்த பலவீனங்கள் தன்னிடம் இருப்பதை அறிந்துகொள்ளாமல் பெரும் போக்கான சிந்தனைகளின் வழியில் நடந்ததால்தான் தனக்கு இந்த நிலை ஏற்பட்டதோ என்று அவன் எண்ணினான்.

அம்மாவின் அதிகப்படியான அன்புதான் தன்னில் இந்த பலவீனங்களை ஏற்படுத்திவிட்டன; அதனால்தான் ஊராரின் சொல் வீச்சுக்களையும் பார்வைத் தாக்குதல்களையும் தன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; அதனால் அவற்றிலிருந்து தான் ஒதுங்கிவிட நினைத்ததில் தவறில்லை என்று அவன் தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டான்.

எந்த விதமான சமாதானங்களைக் கூறிக் கொண்டாலும் தனக்கு ஏற்பட்ட முடிவை மாற்ற முடியாது என்று நினைத்தபோது, நடந்தவைகளைப்பற்றி மேலும் தொடர்ந்து சிந்திப்பதை அவன் வெறுத்தான்.

தன்னுடைய வாழ்க்கை இந்த நிலைக்கு வந்துவிட்டதில், சமூகத்திற்கும் ஒரு பங்கு இருக்கிறது என்ற நினைப்பில் அவன் திருப்திப்பட்டான்.

இந்த இறுதிக் கட்டத்தின் ஞானோதயங்கள் எந்தப் புது விளைவுகளையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை.

நாளைக் காலையுடன் முடிந்துவிடப் போகும் தன் வாழ்க்கையில், இனி ஏற்படுகிற சிந்தனைகளால் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடாது என்ற எண்ணம் ஏற்பட்ட போது அவன் மனம் ஓய்வுற்றது. எந்த விதமான சிந்தனைகளிலும் ஈடுபாடின்றி தன்னுடைய இறுதிக்கணங்களை அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

வாழ்க்கையில் பல ஏமாற்றங்களுக்கிடையே, தன் அன்பையெல்லாம் கொட்டிவளர்த்த ஒரே மகன், தன்னுடைய அபிலாஷைகளையெல்லாம் அழித்துவிட்டுத் தூக்கில் தொங்கப் போகிறான் என்பதற்காக வேதனைப்படும் ஒரு தாயின் இறுதி முடிவுகள் பற்றிய சிந்தனைகள் அவனுள் எழவேயில்லை.

மறு நாள் —

ஒரு தாயும் மகனும் ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் உயிரை இழந்தது பற்றிய விஷயத்தைத் தாங்கிய செய்தித்தாள்கள் அந்த ஊரில் விற்பனையாகின்றன.

இறந்து போன அவர்களுக்காக நிறையப் பேர் அனுதாபப்படுகிறார்கள்.

''பாவம்''

--ஃ--

## பழுத்த எழுத்தாளர்



ஒருவர்: நான் நேற்று எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினேன்.

மற்றவர்: மிகவும் சந்தோஷம்... நீர் எழுத்துலகில் பெரிய சாதனைகள் செய்யப் போவதாக உமது பதினைந்தாவது வயதில் எனக்குக் கூறினீரே. எழுத்துலகில் என்ன செய்திருக்கிறீர்?

ஒருவர்: எழுதத்தான் வேண்டும். அன்று தொடக்கம் ஒரு புனை பெயர் தேடுகிறேன். நல்ல பெயரொன்றும் அகப்படவில்லை.

— அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடு:

# கடலும் படகும்

ஆசிரியர்: க. வீரகத்தி
விலை: ரூ. 2. 50
இலங்கைப் பண்டிதர் சங்க வெளியீடு

எங்கு பார்த்தாலும் இலக்கியச் சந்திப்புகளும், பாராட்டு விழாக்களும், நூல் வெளியீடுகளும் நடைபெறுகின்றன. இலக்கியச் சர்ச்சைகள், விமரிசனங்கள் என்றெல்லாம் பேசப்படுகின்றன. ஆனல் எங்காவது மொழியாராய்ச்சி, மொழிச் சர்ச்சை நடைபெறுகிறதாகக் காணேம். மொழி ஆராய்ச்சியில் வெற்று வாய்ச் சாலகத்துக்கிடமேது? மொழி விசாரத்திற்கு இலக்கணப்புலமை வேண்டும். பெரும்பாலான (படித்தவர்) களைப் பொறுத்தமட்டில் இலக்கணம் இப்போது மருந்துச் சரக்காகிவிட்டது.

மருந்துச்சரக்குகள் பலவகை. கசப்புடையன பல; காரம் படைத்தன பல; இனிப்புடையவும் சிலவுள. அவற்றுள் அதிமதுரம் என்பதும் ஒன்று. சுவை மட்டிலன்றிக் குணவியல்பிலும், பெயருக்கேற்ற நலம் வாய்ந்த, அதிமதுரம் போன்றது, 'கடலும் படகும்'. பவணந்தியார் நன்னூலெழுதப் புகுந்த நோக்கம் மொழித்திறத்தின் முட்டறுத்தல் என்பார். பள்ளி மாணவர்களன்றிப் பட்டதாரிகள் கூட 'அந்த அளவு என்பதை அந்தவளவு என்று எழுதுவதா, அந்தளவு என்று எழுதுவதா அன்றேல் உள்ளவாறே புணர்த்தாது எழுதுவதா, என்ற இதுபோன்ற ஐயப்பாடுகளால் இடர்ப்படுவர். இவர்களையெல்லாம் இலக்கணம் படிக்கத் தூண்டும் வகையில், இலக்கண வேட்கை ஏற்படும் தன்மையில் செந்தமிழ் இன்சுவை சொட்டச் சொட்டத் தீட்டப்பெற்றுள்ள அற்புதப் படைப்பு 'கடலும் படகும்'.

'வாணியெனும் தோணியிலே வாழ்க்கைப் பெருங்கடலில் ஞான உலா வருவோம் நாம்' என முன்னொருகால் கவிதை வழிகாட்டிய பண்டிதர் தமிழ் இலக்கணக் கடற்பரப்பைக் கண்டு மலைத்து நிற்பார்க்கு இத்தெள்ளமுதச் சிறுநூலாம் வள்ளத்திலேற்றி அக்கடல்படு திரவியத்தின் கவினுர் சிறப்புகளைக் காட்டிச் செல்கிறுர். கருத்து முத்துகளை இனமறிந்து கண்டெடுக்கும் நுட்பங்களைக் காட்டித் தந்துள்ளார்.

முத்துக்குளிக்க முனைந்து காயம் பட்டு அழுகிய சாதனைகளுடன் வெளியேறி முத்தெடுத்தோம், என்று வாய் குழறுவாரைப் படம் பிடித்துக் காட்டியதன்வழிப் போலி எழுத்தாளர்களைக் கிண்டல் செய்வதைத் தோற்றுவாயாகக் கொண்டு படர்கிறது நூல். கடலும் படகும் என்ற தலைப்பின் விளக்கம், தொல்காப்பியம் என்ற நூற்பெயர் அமைந்த சிறப்பு ஆதியன அடுத்து விளக்கம் பெறுகின்றன. தொல்காப்பியப் பெயர் விளக்கம் புதுமையானது; போற்றத் தக்கது. இலக்கணக்கல்வியின் பயன்களை விளக்குமிடத்து சொற் சிக்கனத்துக்கு உதவுவது என்ற கருத்தை அழுத்தம் கொடுத்து விளக்கிச் சொல்கிறுர். இதனை இன்றைய மொழிபெயர்ப்பாளர்கள் முக்கியமாகக் கவனித்தல் வேண்டும். தமிழ் மரபறியாமையால் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் 'ஒரு' என்ற பிரயோகம் வருமிடங்களிலெல்லாம் மொழிபெயர்க்கும்போது 'ஒரு' சேர்த்து எழுதிவிடுகின்றனர். இதனுல் நடை விரசமுறுகிறது.

சொல்லாக்கத்தில் நம் முன்னேர் கையாண்ட உபாயங்கள் சொற்படுவிற்பனம் என்ற தலைப்பில் சுவைபெற விளக்கப்படுகின்றன. மணத்தால் மருவிய மகளே மருமகள் என்ற விளக்கம் — புதுமையானது; அருமையானது. துடைப்பம் என்பதன் ஆக்கப்பாட்டு விளக்கம், யாவர்க்கும் ஏற்புடையதோ என்னவோ சிந்தனையைத் தூண்டுவது. மொழி நாட்டமுடையார் சொல்லமைப்புகளை ஆராய்ந்து பார்ப்பதனைச் சிறந்த பொழுதுபோக்காகக் கொள்ளலாம், என்பதற்கு பண்டிதர் வீரகத்தியவர்கள் காட்டிய சில அருமைப்பாடு கொண்ட விளக்கங்களே சான்று. அடுத்து, சொற்களைப் புணர்த்தி எழுதுவது அவசியமாயினும், கரும்புணர்ச்சி நடையினை யிடர்ப்படுத்துவதோடு சில சமயம் பொருள் மயக்கத்திற்கும் இடனுகி விடும், என்பதைத் 'தொல்காப்பியர் ஓர் அறிவுள்ள மனிதர்' என்ற உதாரண மூலம் தெளிவுறுத்தியுள்ளமை, நினைந்து, நினைந்து நயத்தற்குரியது.

பாட்டைத் திறப்பது பண்ணுலே என்ற பகுதி, யாப்பிலக்கணத்தின் பயனை விளக்குவது பாட்டைப் புனைதற்கு மட்டுமன்றிப் பாட்டைப் படித்து மகிழவும் யாப்பு அவசியமென்பது இங்கு பேசப்படுகிறது. பாட்டைத் திறப்பது பண்ணுலே என்பது மட்டுமன்று, பாட்டுச் சிறப்பதும் பண்ணுலே என்பதை உணராதார் சிலர் வசனகவிதை படைக்க முயல்வதைக் கூறி வசன கவிதை முயற்கொம்பு போன்றது என்று விளக்கி முடித்திருக்கும் தருக்கவிற்பன்னம் சிவஞான முனிவரை நினைவுபடுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமை பற்றிய அதிகாரம் வேகடஞ் செய்த மணியென மின்னுகின்றது. நாடக பாணியில் விடயத்தை அறிமுகஞ் செய்து 'ஆல்போல் தழைத்து' என்ற ஆசியுரையினை உதாரணமாகக் கொண்டு உவமையின் அருமை பெருமைகளை அழகுறக் காட்டி அதன் வகைகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார் ஆசிரியர். உவமையின் பல்வகைக் கோலங்களும், அவற்றால் மொழி பெறு நளினமும் நளினத்தால், படிப்பார்க்கு உள்ளத்தில் ஏற்படும் உள்ளக்கிளர்ச்சியும், சொல்லோவியங்களாய்ச் சுவை துளும்பி நிற்கின்றன.

சிலேடை பண்டிதரின் உடன்பிறவி என்பதனை அவரோடு உரையாடும் வாய்ப்புப் பெற்றோர் அறிந்திருப்பர். ஆதலின் சிலேடை பற்றிய அதிகாரம் நூலின் சிகரம் போலச் சிறந்து விளங்குவதில் வியப்பொன்றுமில்லை. இந்நூலில் ஆங்காங்கு அவர் ஆண்டுள்ள சொற்கள், வசனங்கள், சிலேடைப் பொருள் தந்து இன்பம் பயப்பதைப் படிப்போர் உணராதிரார். சிலேடை பிறந்த கதையைச் சொல்ல வந்த ஆசிரியர் 'புணர்ச்சியில் தோன்றிய இரட்டைகளே சிலேடை' என்று கூறிய விளக்கத்தினும் சிலேடை கண்சாடை புரிவதைக் கண்டு இதயம் களிக்கிறோம்.

எடுப்புப்போல முடிப்பும் இனிதாகச் சிறப்புற முடியும் தன்மையில் அன்பின் ஐந்திணை என்னும் பகுதி அமைந்திருக்கிறது. தூய அன்புவழிப்பட்ட உள்ளங்களில் துளிர்க்கும் காதல்மலர் கற்புக்கனியாம் உருப்பெற்று குடும்பநலச் சுவையார்ந்து ஐந்திணை நெறியளாவி மிளிரும் வாழ்வுப் பொலிவுடன் நிறைவுறுகின்றது. நூல்.

உரு அளவிற் சிறியதாயினும் பொருளளவிற் பெரியது இந்நூல். இலக்கண உண்மைகள் பொதிந்தது; இலக்கிய நடை பயின்றது. எடுத்துச் சொல் பொருளுக்காகவன்றி மொழி நடந்து செல் அழகுக்காக தமிழறிந்த யாவரும், படிக்க வேண்டியது. செந்தமிழ் மணச் செறிவுடையதாய் எழுத்து அமைய வேண்டுமென விரும்புவோர் இதனைப் பயிலுதல் கடன். பள்ளி மாணவர்க்கு உகந்த படைப்பு. தமிழ் கற்கும் க. பொ. த. வ. மாணவர்களுக்கு இதனைத் துணை நூலாகக் கல்விப் பகுதி விதிக்குமாயின் மாணவர்கள் பெரும் பயனடைவர். அரசாங்கம் இதனைச் செய்யுமா?

வ. சி.

—ஃ—


உள அழுக்கைப் போக்குவது திருக்குறள்
உடை அழுக்கைப் போக்குவது மில்க் வைற்

★ மில்க் வைற் நீல சோப்
★ மில்க் வைற் பார் சோப்
★ மில்க் வைற் சலவைப் பவுடர்

வாங்கிப் பாவித்து உறைகளை அனுப்பி
பரிசுகளைப் பெறுங்கள்

தொலைபேசி: 7233
தந்தி: 'மில்க்வைற்'

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.
கிளை: மில்க்வைற் டிப்போ, — 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— அத்தியாயம் எட்டு —

# வைகாசிப் பொங்கல்

திருவிழாக்களில் பறைமேளம் கொட்டுவது வண்ணார் பண்ணையிலேயே பெரியதம்பிரான் ஒருவருக்குத்தான் அதுவும் பெரியதம்பிரானின் வைகாசிப் பொங்கல் வந்துவிட்டால் போதும். வண்ணார்பண்ணை எங்கிலும் பறைமேளத்தின் பல்வகைத் தாள ஒலி ஓயாது எழுந்து கொண்டே இருக்கும்.

பெரியதம்பிரான் வேலுப்பிள்ளைக் குடும்பத்தினரின் குலதெய்வம். வைகாசிப் பொங்கலை வேலுப்பிள்ளையின் தலைமையில் அச்சமூகமே நின்று கொண்டாடும். பெரியதம்பிரானுக்குச் சொந்தமான காணி ஒன்று கலட்டியிலுண்டு. வேலுப்பிள்ளையின் பூட்டன் கோயிலுக்கு எழுதி வைத்த சொத்து அது. அக்காணியில் பொங்கல் அன்று மடை வைத்து, பெரியதம்பிரான் கோயிலுக்கு ஊர்வலமாகக் கொண்டு வருவார்கள்.

ஒரு சமூகத்தின் சிறப்பான விழாவது.

பொங்கல் அன்று இரவு நாட்டியம், மேளக் கச்சேரி, கதாப்பிரசங்கம் என்பன விடிய விடிய நடைபெறும். அந்த நாளில் நரியன்குண்டு முழுவதும் திருவிழாக் காண வந்தோர் குழுமியிருப்பார்கள். கந்தையருடைய கடையில் மட்டும் அந்த இரவு முந்நூறு ரூபாய்களுக்குக் குறையாது வியாபாரம் நடைபெறும்.

வழக்கம் போல அன்று வைகாசிப் பொங்கல்.

ராணி அன்று கல்லூரிக்குச் செல்லவில்லை. பொங்கலுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யவே நேரம் சரியாக இருந்தது. வேலுப்பிள்ளை மூன்று நாட்களாகக் கோயிலில் தான். சோடனைகள், நிகழ்ச்சி ஒழுங்குகள் என்பனவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

எந்த ஓர் ஆண்டிலும் இல்லாதவிதமாக இத்தடவை பொங்கல் விழா பெரிதாக மாறிவிட்டது; நரியன்குண்டடி ஒரே கலகலப்பாக மாறிவிட்டது. மின்சார சோடனைகளும் சிகரங்களும் அழகு மயமாகக் காட்சி தந்தன. நரியன்குண்டடி அரசமர இலைகளின் சலசல ஒலியையும் பனை ஓலைகளின் கரகர ஒலியையும் மீறி திருவிழாக் காண வந்தவர்களின் உரையாடல் ஒலியே எழுந்திருந்தது.



ஒருத்தி: என்னுடைய கணவன் முழுச் சோம்பேறி... பகல் முழுக்கக் கொட்டாவி விடுவதுதான் வேலை.

மற்றவள்: உங்க கணவன் அரைச் சோம்பேறி. என்னுடைய கணவன் முழுச் சோம்பேறி... அவர் இரவில் தூங்கும் போதும் கொட்டாவி விடுவார்.

இவ்வாண்டு கந்தையருடைய கடைக்குப் போட்டியாகப் புதிதாகப் பல சிறிய கடைகள் தோன்றியிருந்தன.

சின்னத்தம்பியும் விழாவிற்கு வந்திருந்தான். அவனைக் காணும் போதெல்லம் ராணி அவனுக்காகக் கவலைப்பட்டாள். ராணியின் உள்மனத்தில் ஏதோ ஒன்று இருந்து கொண்டு 'சின்னத்தம்பி பாவம்' என்று ஓயாது கூறிக்கொண்டே இருந்தது. தான் தொடர்ந்து படிப்பதனால் எத்தனையோ மாற்றங்கள் நிகழும். சின்னத்தம்பி தனக்குக் கிடைக்காது போகலாம் என்பது அவளுக்குத் தெரியும். அதற்காக அவள் கவலைப்படவில்லை.

உண்மையில் சின்னத்தம்பியைப் பற்றித் தொடர்ந்து ஒரு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நிமிடங்கள் அவள் நினைத்தவளல்லள். அவளுக்குத் தன் படிப்பு முக்கியம்; தன் குடும்பத்தின் உயர்ச்சி முக்கியம்.

கோயிலுக்குப் புறப்பட்டபோது சுபத்திரா தனக்கு உடம்பு சரியில்லை என்று கூறி வர மறுத்துவிட்டாள்.

'எல்லாரும் கோயிலுக்குப் போறம். நீ இங்கை தனிய இருக்கப் போகிறியே?' என்று ஆச்சி கேட்டாள்.

'தனிய இருக்க என்ன பயமெணை?' என்றாள், சுபத்திரா.

'ஏன் சுபத்திரா, திருவிழா நல்லாவெல்லோ இருக்கும். வாவன்...' என்று ராணி எவ்வளவோ வற்புறுத்திப்பார்த்தாள்.

'எனக்கு அந்தச் சனக்கும்பலுக்கை வர விருப்பமில்லை. நீ போ, அக்கா...' என்று ஒரேயடியாக மறுத்துவிட்டாள், சுபத்திரா.

சுபத்திராவின் போக்கு ராணிக்குப் புரிபடவில்லை. அவள் பெரிதும் மாறிவிட்டாள்; முன்போலக் கலகலப்பாக இல்லை; மிகுந்த அடக்கமும் அமைதியும் அவளிடம் குடிகொண்டுவிட்டன. அவளது அழகிற்கு அணி செய்வன போல அவை இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவகை ஏக்கம் அவள் முகத்தில் பிரதிபலிப்பதை ராணி அடிக்கடி அவதானித்து வந்திருக்கிறாள்.

காரணம்தான் புரியவில்லை.

ஆச்சி கோயிலுக்குப் புறப்படும்போது கூறினாள்:

''சுபத்திரா, படலையை நாங்க வெளியிலை பூட்டிக் கொண்டு போறம்; நீ அறைக்கை போய்ப் படு... தலைவாசல் லாம்பு எரியட்டும்...... சாப்பிட்டிட்டுப் படு...'


வழக்கத்திலேயே சுபத்திரா எதற்கும் தான்தான் என முன் நிற்பவளல்லள். சினிமா பார்க்கச் சில வேளைகளில் ராணி விரும்பி அழைத்துச் சென்றிருக்கிறாள்.

கோயிலுக்கு அவர்கள் வரும்போது மேளக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. ராணி வரும்போது தங்கராசுவையும் வாமதேவனையும் கண்டாள். தங்கராசு கனகுவோடு நரியன்குண்டு விளாத்தி மரத்தின் கீழ் நின்றிருந்தான். இவர்களைக் கண்டதும் அவன் ஒருவிதமாக முறைத்ததை அவள் அவதானித்துக் கொண்டாள்.

வாமதேவன் தந்தையின் கடையில் நின்றிருந்தான். அவன்

# அண்ணா சொன்ன அணாக் கதை

செல்வம் உயர்ந்திருந்தால் மனப் பண்பும் உயர்ந்திருக்கும். எளியவரைக் கண்டால் இரக்கம் காட்டச் சொல்லும். மனதிலே தாராளம் இருக்கும். பேச்சிலே பெருமிதம் தோன்றும். எடுத்துக் காட்டாக, மாலைநேரம் ஒரு வாலிபன் தன் நண்பர்கள் புடை சூழ, நன்றாகச் சாப்பிட்டுவிட்டுக் காபி கிளப்பிலிருந்து வெளியில் வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். வருகிற வாலிபனைப் பார்த்து ஒரு பிச்சைக்காரன் ''சாமி, காலணா காசு, சாமி!'' என்று கேட்பான். உடனே வாலிபன் ஒரு அணாவை வீசி எறிவான். பீடாவைப் போட்டுக் கொண்டே இன்னும் கொஞ்சதூரம் சென்றவுடன் வாலிபனைப் பார்த்து இன்னொரு பிச்சைக்காரன் ''ஐயா...'' என்று கையை நீட்டுவான். இல்லை என்னாமல் காலணா காசு கொடுப்பான். இன்னும் கொஞ்சதூரம் சென்றவுடன் அதே வாலிபனைப் பார்த்து மற்றொரு பிச்சைக்காரன் 'ஐயா...' என்றால் ''சீ போ! போடான்னா போ!'' என்று கூறிவிட்டு தன் நண்பர்களைப் பார்த்து ''Nowadays I don't agree with the Beggar problem Sir,'' என்று சொல்லுவான். கொஞ்ச நேரத்தில் ஒரு வாலிபனுடைய உள்ளம் மாறக் காண்கிறோம். முதலில் காலணா கேட்ட பிச்சைக்காரனுக்கு ஒரு அணாவை வீசி எறிந்த அதே வாலிபன்தான் மூன்றாந் தடவையாக பிச்சைக்காரனைச் சந்தித்தபோது ''சீ! போடா!!'' என்று ஏசுகிறான். காரணம் காபி கிளப்பை விட்டு வெளிவந்தபோது இருந்த ஆனந்தம் மாறி, கையில் காசு குறைய ஆரம்பித்தவுடன் வழக்கமாக அவனுடைய மனம் மாத்திரம் என்ன, எவனுடைய மனமும், அந்த நிலையில் அப்படி மாறித்தானே ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கோயிலுக்குப் போனதைக் காணவில்லை.

இராசு அண்ணனின் கார் இத்தடவை பெரியதம்பிரான் திருவிழாவிற்காக நன்கு ஓடியிருக்கிறது. உடையார் வீட்டு மதிற்சுவரோடு அது நின்றிருந்தது.

அவர்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் போய் அமர்ந்து கொண்டார்கள். கண்மணிக்குக் கொஞ்ச நேரத்திற்குள்ளேயே தூக்கம் விழிகளில் நிறைந்தது. தூங்கி வழிந்தாள்.

'அக்கா... நித்திரை வருகுது...'

'இதுதான் உன்னைக் கூட்டிக் கொண்டு வாறதில்லை...' என்றாள், ராணி.

மேளக்காரருக்குச் சின்னத்தம்பி சோடா கொண்டு வந்து வைத்தான். வைக்கும்போது அவனது விழிகள் தங்கள் பக்கம் பரவியது போல அவளுக்குத் தெரிந்தது. அவள் வேறெங்கோ தனது பார்வையைச் செலுத்திவிட்டாள்.

இப்படி ஒரு திருவிழாவில் தானே விதானையாருக்கும் தங்களுக்கும் கலவரம் மூண்டது; அதில்தானே மகாலிங்கம் தங்களுக்காக மண்டையை உடைத்துக் கொண்டார். இது என்ன நினைவு? இப்போது ஏன் எழ வேண்டும்?



ராணி கோயிலுக்கு வந்திருப்பவர்களைச் சிறிது நோட்டம் விட்டாள். அவளுடைய சொந்தக்காரர் பலர் வந்திருந்தார்கள்; அயலவர்கள் சிலரும் இருந்தனர். தூரத்தில், நல்ல வெளிச்சத்தில் சின்னத்தம்பி யாருடனோ நின்று சுவாரசியமாகப் பேசிக் கொண்டு நின்றிருந்தான். இருவரும் மிகவும் அன்னியோன்யமாகப் பேசிக் கொண்டு நின்றிருந்தார்கள்.

ஒரு கணம் அந்த இடத்தை விட்டு அவளால் தன் கண்களைப் பெயர்க்க முடியவில்லை. சின்னத்தம்பி அத்தானோடு பேசிக் கொண்டு நிற்பவனை எங்கோ அவள் பார்த்திருப்பது போல ஒருணர்வு. எங்கே...... எங்கே? அந்த முகம் அவளுக்கு மிகவும் பரிச்சயமானதல்லவா? அவளுக்கு நினைவு வந்துவிட்டது.

அவன்தான் அவர்களுக்காக நீதி பேசியவன்.

அவன்தான் அவர்களுக்காக அடி வாங்கியவன்.

அவன்தான் அவர்களையும் தங்களில் ஒருவராக மதித்து அழைப்பவன்.

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—மகாலிங்கம் கலகலவென்று சிரித்தான்; சின்னத்தம்பியும் சிரித்தான். இருவரும் அந்த இடத்தை விட்டு எங்கோ போனார்கள்.

கோயில் முழுவதும் வெறிச்சோடி விட்டது போன்ற உணர்வு.

கண்மணி தூங்கி விழுந்தாள். ராணி மெதுவாக அவள் தலையைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள். மேளக் கச்சேரி முடிந்து இசைக் கச்சேரி ஒன்று ஆரம்பமாகிவிட்டது; மெல்லிசைதான்.

சினிமாப் பாடல்களைத் தமது பக்க வாத்தியங்களுடன் முழங்கித் தள்ளினார்கள். ஆலய முன்றலில் பாடக்கூடாத பாடல்கள். யார் அதைக் கவனிக்கின்றார்கள்? கடவுளை வணங்க வைப்பதற்குக் கூட எதையாவது காட்டித்தானே மக்களை அழைக்க வேண்டியிருக்கின்றது.

இருந்தாற் போல இராசு அண்ணனின் காரைச் சூழ்ந்து பலர் குமிழ்வதை அவள் கண்டாள். கோயிலுக்குள் ஏதோ அலுவலாக நின்ற வேலுப்பிள்ளையும் கார் நின்ற இடத்திற்கு விரைந்தார்.

என்ன நடந்தது? ஏதாவது, சண்டை சச்சரவோ?

ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வதை அவள் கண்டாள். பெண்கள் பகுதியிலும் சலசலப்பு எழுந்தது.

'அக்கா, அண்ணன்ரை கார் ரயரை வில்லுக் கத்தியாலை ஆரோ குத்திக் கிழித்துப் போட்டான்கள்...' என்றபடி கனகசிங்கம் வந்தான்.

ராணிக்குத் 'திக்'கென்றது. ஆச்சி 'ஐயோ' என்று கத்திவிட்டாள்.

ஏன் இந்தக் கொடுமை? சும்மா நின்றகார் யாரை என்ன கேட்டது? வண்ணான் கார் ஓடுவதா என்ற பொறாமையா?

— இராசு கொதிப்போடு நின்றான்.

'எந்த எளியவன் செய்த வேலை...... முதுகெலும்பில்லாதவன்கள்...... கோபமிருந்தால் நேருக்கு நேர் வாறதுதானே...?'

'இதை இப்படியே விடக் கூடாது... பொலீசைக் கூப்பிடுவோம்......' என்றான், மகாலிங்கம்.

'செய்தது யார் என்று தெரியாமல் பொலீசைக் கூப்பிட்டு என்ன செய்கிறது, தம்பி?' என்றார் வேலுப்பிள்ளை.

'ஆர்... செய்கிறது... உவங்கள்தான்...' என்றான் சின்னத்தம்பி, குமுறலோடு.

'நடந்தது...... நடந்து போச்சு... பொலீசைக் கூப்பிட்டு திருவிழாவைக் குழப்பக் கூடாது......' என்றார் வேலுப்பிள்ளை.

ஒருவிதமாக மீண்டும் கோயிலில் அமைதி குடிகொண்டது. அதற்கு மேல் ராணியால் திருவிழாவை ரசிக்க முடியவில்லை. உடல் அசதி வேறு உள்ள அசதியோடு சேர்ந்து கொண்டது. வீட்டிற்குப் போய் படுக்கையில் விழுந்தால் நல்லது போலப் பட்டது. கண்மணி வேறு தூங்கி வழிந்தாள்.

'ஆச்சி... நான் வீட்டுக்குப் போகப்போறன். கண்மணியும் நித்திரை...'

ஆச்சி அவளைப் பார்த்தாள்.

'இருந்து பிரசங்கத்தையும் கேட்டிட்டுப் போவன்...... வந்திட்டு...'

'இல்லையணை... எனக்குப் போக வேணும் போல இருக்கு... அங்கை சுபத்திராவும் தனிய...... நீ படலைத் திறப்பைத் தா... தம்பியைத் துணைக்குக் கூட்டிக் கொண்டு போறன்...'

வீட்டிற்குப் போகும் போது கனகசிங்கம் கூறினான்:

'உது தங்கராசுவோடு நின்ற கனகுவின்ரை வேலைதான்.

**நவ மந்திரம்**



ஸ்வாமிஜி: ஜம்போ மகா தேவ!

சீடன்: குருவே! என்ன ஜம்போ என்று தவறாகப் பிரார்த்திக்கிறீர்கள்?

ஸ்வாமிஜி: இல்லையப்பனே! ஜம்போ விமானத்தில் யாத்திரை செய்ய ஆசையாக இருந்ததில் இப்படி அடிக்கடி தவறாக......

— ச. ரா. பா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா. நான் இரண்டு மூன்று முறை கவனித்தனுன்...... கனகு தான் அண்ணையின்ரை கார்ப்பக்கம் மசந்தி மசந்தி நின்றவன்... தங்கராசு சொல்லித்தான் அவன் இதைச் செய்திருக்கவேணும்...'

ராணி மௌனமாக நடந்தாள். மெல்லிய நிலவொளி. கண்மணி தூக்கக் கலக்கத்தோடு கூடவே வந்தாள்.

ராணியின் இதயத்தில் இனந் தெரியாத கலக்கம் ஒன்று அவளை அறியாமலேயேபிறந்தது. ஏதோ பெரியதொரு நிகழ்ச்சி தமது குடும்பத்தில் நிகழப்போவது போன்ற உணர்வின் தலைதூக்கலால் அவளது உள்ளமே கனத்தது.

மௌனமாக நடந்தாள். அம்மன் கோயில் வந்துவிட்டது. தம்பிரான் கோயிலில் இசைக் கச்சேரி இன்னமும் முடியவில்லை.

மெல்லிய சோக கீதம் ஒன்று இசையாக எழுந்து கொண்டிருந்தது.

'அக்கா... உன்னைப் படலையிலை விட்டிட்டு நான் போறன்.'

'ஓம்...'


வீடு நெருங்கிவிட்டது.

'தலைவாசல் லாம்பைக் காணேமே? நூத்துப் போட்டுச் சுபத்திரா படுத்திட்டாளாக்கும். அல்லது காத்துக்கு நூந்திருக்கும். நீ போ... நான் போறன்...' என்ருள், ராணி.

கனகசிங்கம் போய்விட்டான்.

கண்மணியை ஒரு கையில் பிடித்தபடி படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள், ராணி.

நிலவொளி முற்றத்தில் தெள்ளெனப் படர்ந்திருந்தது.



ஒருவர்: உமது மேடைப் பேச்சுகளை நான் விரும்புவதில்லை. ரேடியோப் பேச்சுகளை பெரிதும் விரும்புகின்றேன்.

பேச்சாளர்: ரேடியோப் பேச்சை உலகம் கேட்பதால் அதைக் கவனமாகக் கருத்துச் செறிவோடு பேசுகின்றேன்.

ஒருவர்: இல்லை, ரேடியோப் பேச்சில் சலிப்பேற்பட்டால் நிறுத்த முடியும்.

— ஜோக்கிரட்டீஸ்

விறுந்தையில் இருந்த வாங்கில் கண்மணியைப் படுக்க விட்டாள்.

'சுபத்திரா...'

— அவள் எழும்பவில்லை. நல்ல உறக்கம் போலும்.

சீமைக் கிளுவைக்குப் பக்கத்தில் ஐயா வாளி நிறையத் தண்ணீர் அள்ளி வைத்திருந்தார். வீட்டிற்குள் போவதற்கு முன் கை கால் அலம்பிவிட்டே செல்லல் வேண்டும்.

கால்களைக் கழுவிக் கொண்டு வந்தாள், ராணி.

வீட்டுக் கதவைத் தட்டிச் சுபத்திராவை எழுப்ப முயன்ருள்.

கதவு திறந்தே கிடந்தது.

ஏதோ ஒன்று மெல்லிய இருளாக அவள் இதயத்தில் குவிந்தது.

'என்ன பெண்... இவள்... கதவைப் பூட்ட மறந்து...'

— உள்ளே போய் விளக்கைக் கொளுத்தினுள்.

'சுபத்திரா...?'

சுபத்திராவைப் படுக்கையில் காணவில்லை. படுக்கை விரித்தபடியே கிடந்தது.

'சுபத்திரா... சுபத்திரா...'

இனந் தெரியாத பயமொன்று அவளைக் கௌவிக்கொண்டது.

'சுபத்திரா... சுபத்திரா...' என்று பெருங்குரலில் அழைப்பு விடுத்தாள், ராணி.

முற்றத்திற்கு விரைந்து வந்தாள்.

'என்ன, அக்கா...' என்றபடி கிணற்றடிப் பக்கமிருந்து ஓடி வந்தாள், சுபத்திரா.

'இவ்வளவு நேரமும் எங்கை போனனீ?...'

சுபத்திராவால் உடன் எதுவும் பேச முடியவில்லை.

— யரோ வேலியால் ஏறிக் குதித்தது போன்ற சத்தம்.

சுபத்திராவை ஏறிட்டுப் பார்த்தாள், ராணி.

அவளுடையதோற்றம் வழக்கத்திற்கு மாருகவே தெரிந்தது.

பழைய சுபத்திராவல்லள். காற்றின் சுழிப்பால், வீட்டுக்குள் ராணி கொளுத்தி வைத்திருந்த விளக்கு, ஒரு கணம் சுடர் விட்டு அணைந்தது.

(தொடரும்)

—ஃ—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தியின் காதல்

**முன்னுரை :**

கவிஞர் நவாலியூர் சு. சொக்கநாதன் அவர்களுக்கே இந்த நாவல் சமர்ப்பணமாகும். ஏனெனில், 'கொத்தியின் காதல்' என்ற இந்த நவீனத்தின் பிதா அவரே. 'பேய்க் கலியாணம்' என்ற தலைப்பில், அவர் ஒரு கவிதையை அருமையாகப் பாடியுள்ளார். அக்கவிதையைப் படித்ததினால் ஏற்பட்ட மன அருட்சியினால், இந்த நகைச் சுவை நவீனத்தை எழுதினேன். இக் கவிதை 'சிட்டுக் குருவி' என்ற கவிதை நூலில் உள்ளது. சு. சொக்கநாதன், வி. கந்தவனம், ஈழவாணன் ஆகிய மூன்று கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு இது.

'வைகாசி அத்தமது வந்தவொரு நாளில்
வளர்குளிகள் படுபட்சி அட்டமியுங் கூட
மெய்யான நடுச்சாம வேளையது வரவே
விறற்பேய்கள் செய்யுமொரு கல்யாணம் பாரீர்!'

— இது சு. சொக்கநாதன் அவர்களின் கவிதையில் ஒன்று.

'கொத்தியின் காதல்' ஒரு அதீத கற்பனைக் கதை. நடக்க முடியாததை நடப்பதாகக் கூறும் கதை. ஆனால், இக்கதையின் ஊடே, நமது சமூகத்தின் அவலங்களை மெல்லிய இழையாக ஓடவிட்டிருக்கின்றேன்.

இது ஒரு பேய்க் கதை தான். ஆனால், இதில் வரும் பேய்களைக் கண்டு வாசகர் எவரும் பயப்படவோ, திகிலுறவோ மாட்டார்கள். அப்பேய்களுக்காக பரிதாபப்படவே செய்வார்கள். கொத்தியின் சோகம் நிறைந்த காதல் வரலாறு இது! ■

## சுடலைமாடனின் சோகம் (1)

ஒரு நாள், அமாவாசை இரவு. நள்ளிரவு கடந்து ஒரு சாமம் இருக்கும். கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு முன்னால், பனைகளுக்கும் முட்பற்றைகளுக்கும் மத்தியில் அமைந்திருந்த சுடலையில் பிணம் ஒன்று எரிந்து அடங்கிக் கொண்டிருந்தது.

இருள் கவிந்த அந்தப்பேயிரவில், பனைகள் இராச்சதக் கால்களாகச் சரசரத்து ஆடின. மயானத்தின் மத்தியில் சடைத்து ஓங்கி வளர்ந்திருந்த ஆல மரமும் காற்றிற்குத் தாளம் போடுவது போலக் கிளைகளை அசைத்துக் கொண்டிருந்தது.

நீறுகிக் கொண்டிருந்த அந்தப் பிண மேடையில், பரவிக் கிடந்த தணல் கங்குகள் கடும் இருளில் வைரங்களாக மின்னின.

பிணம் எரிக்கும் இச்சாம்பல் மேட்டின் மீது, ஆல மரத்தின் பாரிய கிளை ஒன்று படர்ந்திருந்தது.

அந்தக் கிளையில் சுடலைமாடனும் எருமைப்பல்லனும் அமர்ந்திருந்தார்கள். அவர்களது பாரத்தைத் தாங்க முடியாமல் அந்தப் பெரிய ஆலங் கிளை சிறிது தாழ்ந்து இருந்தது.

சுடலைமாடனின் கரிய முகத்தில் கவலை படர்ந்திருந்தது. அவன் எருமைப் பல்லனை நிமிர்ந்து பார்த்துவிட்டு நெடு மூச்சொன்றை விட்டான் அவனது துருத்தி போன்ற நாசித் துளைகளிலிருந்து வெளிவந்த அனல் காற்று புகையாகப் பாய்ந்தது.

'சுடலைமாடா...... உனக்கு என்ன கவலை? பேய் உலகிலேயே மிகுந்த விகாரமானவன் நீ! என்னைச் சொல்லு, நமது குலத்திலே மிக அழகனாகப் பிறந்த என்னை எவள் ஏறெடுத்துப் பார்க்கிறாள்? உனக்கென்னப்பா.. உன் மச்சாள் கொத்தி உனக்காகத் தவம் கிடக்கிறாள். அவள் இருக்க உனக்கேன் கவலை...?' என்று எருமைப்பல்லன் கேட்டான்.

(பேய்களில் மிகுந்த விகாரம் தான் சிறந்த அழகு என்பதை வாசகர்கள் உணர்ந்து கொள்க.)

'கொத்தியால் தானப்பா, இன்றைக்கு எனக்குக் கவலை...'

'என்ன நடந்தது...?'

'என்ன நடக்கவில்லை...?' என்று பெருமூச்சு விட்டான்,

---

**தத்துவ முத்து**


நீருடன் விளையாடு, நெருப்புடன் விளையாடு. ஆனால் மனச்சாட்சியுடன் மட்டும் விளையாடாதே.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடலைமாடன். அவன் நாசித் துளைகளில் இருந்து வெளிவந்த கரிய புகை போல, வெகு தூரத்திலும் ‘புக்... புக்...’ கென்று புகை கிளம்பியது. அத்தோடு ‘கூ...’ என்ற இரைச்சலும் எழுந்தது. சற்று நேரம் செல்ல கண்ணைப் பறிக்கும் ஒளிக் கதிர்களும் தோன்றின.



‘ஆலம் கிளையில் எருமைப்பல்லனும் சுடலைமாடனும்...’

சுடலைமாடன் திடுக்கிட்டுப் போனான். ‘சடார்’ என்று பாய்ந்து மறு கிளையில் அமர்ந்தான். அவனின் பதட்டத்தைக் கண்ட எருமைப்பல்லன் ‘கூய்......கூய்’ என்று சிரித்தான்.

‘உதுக்குப் போய் பயப்படுகிறியே? உதுதான் றெயில்... உந்த மனிசன்கள் செய்து ஓட விட்டிருக்கிறான்கள்... இந்தச் சுடலைக்குப் பக்கத்தாலே றெயில் பாதையைப் போட்டு, றெயிலையும் ஓட விட்டதாலே, எங்கடை சுடலையின் அமைதியே பாழாய்ப்போச்சுது...... அண்டைக்குப் பார்...... என்ரை தங்கச்சி சோனிப்புட்டு வின்ரை தகப்பனில்லாப்பிள்ளை... எங்கடை குடியிலேயே கொஞ்சம் விகாரமானவன் — றெயில் பாதையிலை அமர்ந்திருந்து விளையாடிக் கொண்டிருந்தான்... விளையாட்டிலே றெயில் வந்ததைக் கவனிக்கவில்லை. ஒரே அடி... என்ரை மருமோனுக்கு விகாரத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த யானைப் பற்கள் மூன்றும் சரி...! ஆள் தப்பினது அருந் தப்பு...இப்பவும் அவன் படுக்கையிலைதான்! மனிசரைக் கண்டால் இப்ப அவனுக்குக் குலை நடுக்கம்...’

‘கூ’வென்று இரைந்தபடியே ‘றெயில்’ சுடலையைக் கடந்து மறைந்தது. அதனையே வெறித்துப் பார்த்தபடி சுடலைமாடன் இருந்தான். அவனுக்குக் கலக்கம் இன்னமும் தீரவில்லை.

‘நீ சரியான பயந்தனீ...’ என்றான், எருமைப்பல்லன்: ‘உப்படிப் பயப்படக் கூடாது...’

‘உதைத்தான் அப்பா, கொத்தியும் சொல்கிறாள்...’

‘உது என்ன புதுக் கதை’

‘புதுக் கதை தான், அப்பா! என்ரை வாழ்வைப் பறிக்கும் கதை... அவள் என்னைக் கேட்கிறாள் ‘நீ சரியான பயந்தனி’ என்று...’ கண்களைத் துடைத்துக் கொண்டான் சுடலைமாடன். எருமைப்பல்லனுக்கும் அழுகை வந்தது. சுடலைமாடன் தொடர்ந்தான்:

‘உன்ரை விகாரத்தைக் கண்டு மயங்கித்தான் நானுன்னைக் காதலிச்சனான். நீ இவ்வளவு பயந்தனி என்றால் காதலிச்சிருக்கமாட்டன் என்கிறாளப்பா, கொத்தி! கொத்தி இல்லாமல் என்னால் இருக்க முடியாதப்பா’ என்று விம்மி விம்மி அழுதான், சுடலைமாடன். விழிக்குழிகளிலிருந்து பொங்கி வழிந்த கண்ணீர், கீழே எரிந்து நீறு பூத்திருந்த பிண மேட்டில் விழுந்து ‘புஸ்...புஸ்...’ என்று சீறின.

‘அழாமல் விசயத்தைச் சொல்லு.’

வானத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு, சுடலைமாடன் கூறுவான்:

‘எனக்கு ஒரு ஒன்றைவிட்ட தம்பி இருக்கிறான்... எறிமாடன் என்று...’

### விசிலடிச்சான் குஞ்சு


ஆசிரியர்: இராமரின் அம்பு பாய்ந்து இராவணன் போர்க்களத்தில் சாய்ந்தானென்று சொன்னபோது உன்னை யார் விசில் அடிக்கச் சொன்னது?

மாணவன்: மன்னிக்க வேண்டும் சார்...... தியேட்டரில் அப்படியான கட்டங்களில் விசில் அடிச்சுப் பழகிப் போச்சு.

— ஜோக்கிரட்டீஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நகைச்சுவை நவீனத்தை எழுபவர் யார்? கதை முடியும் மட்டும் இதனை இரகசியமாக வைத்திருப்பதென 'சிரித்திரன்' முடிவு செய்துள்ளது.... கதையின் முடிவில் வாசகர்களுக்குப் பரிசு காத்திருக்கிறது!



'மனிசரைக் கண்டால் குலைநடுக்கம்...'

'ஓ... எனக்கு அவனைத் தெரியும். பொல்லாத பயல்...என்ரை தங்கச்சி சோனிப்புட்டு வின்ரை புரிசனை — அது தான் என்ரை மச்சான்ரை காலை, நண்டுக் கால் முறிப்பது போல முறிச்சு அனுப்பினவன் அவன் தான்! அதுக்குப் பிறகு அந்தாள் நடக்கேலாமல் கிடந்து செத்தது!...... ஒரு நாளைக்கு எறிமாடன்ரை காலை முறிக்கிறது என்றுதான் இருக்கிறன்...... அவனுக்கும் உனக்கும் என்ன?'



கொத்தியும் சுடலைமாடனும் — 'நீ சரியான பயந்தனி'


'அந்தப் போக்கிரிப்பயல் இப்ப கொத்திக்குப் பின்னலை சுத்துருனும். எங்கை போனாலும் பல்லை இளிச்சுக் கொண்டு திரிகிருனும். கொத்தியின்ரை தேப்பன் ஊத்தைக்குடியனையும் எப்படியோ வளைச்சுப் போட்டான். கொத்தியைத் தனக்குச் செய்து தரும்படியும் கேட்டுக் கொண்டு திரிகிருனும். கொத்தி அழுகிருள்... எப்படியாவது எறிமாடனை உதைச்சு அனுப்பிப் போட்டுத் தன்னைக் கலியாணம் செய்யும்படி...... நான் என்ன செய்ய...? எனக்கு எறிமாடனை நினைச்சாலே கைகாலெல்லாம் பதறுகிறது...'

'அப்ப, கொத்தியைத் தாரை வார்க்க வேண்டியதுதான்'


'டேய்... டேய்... எருமைப்பல்லா, நீயா அப்படிச் சொல்கிருய்? கொத்தியை எப்படியடா நான் தாரை வார்ப்பேன்...? அவள் என் உயிர்... அவளே நான்... நானே அவள்...' என்று கூவியபடியே சுடலைமாடன் எழுந்தான். ஆல மரத்தின் பழைய கொப்பில் கொத்தி இருப்பது போல அவனுக்கு ஒரு பிரமை.

'ஆ... என் அன்பே கொத்தி!' என்று கத்தியபடியே, கைகளை விரித்துக் கொண்டு தாவினுன், சுடலைமாடன்.

ஆலங்கிளையில் தடுக்குண்டு, கீழே எரிந்து நீறு



'கொத்தி அழுகிருள்...'



எறிமாடன் — 'நண்டுக் கால் முறிப்பது போல...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

பூத்திருந்த தணல் கும்பத்தின் மேல் அலைமலக்க, மல்லாந்து வீழ்ந்தான். மறுகணம் —


'கூய்...' என்ற ஓலம் அப்பிரதேசம் எங்கும் எதிரொலித்தது.

சுடலைமாடனின் முதுகுப்புற மயிர்க் கற்றைகள் பொசிந்து மணத்தன.

'ஐயோ, என் விகாரம் போய்விட்டதே? என் முதுகுப்புற மயிரை ஆசையோடு தடவி விடும் கொத்தியின் முகத்தில் இனி எப்படி முழிப்பேன்......' என்று ஓலமிட்டான், சுடலைமாடன்.

— வளரும் —

— ஃ —



'இப்ப கொத்திக்குப் பின்னலே சுத்துகிருனும்...'




✲✲✲

தாலியின் மகத்துவம் மஞ்சளிலே இல்லை, மனதிலே இருக்கிறது. தாலி மட்டும் ஒரு பெண்ணுக்கு வேலியாகிவிடாது. தாலியைத் தெய்வமாக மதிக்கும் மனம்தான் அவளுக்கு வேலியாகும்.

✲✲✲

மானத்தை விட உயிர் பெரிதா என்ன? உயிரைக் கொடுத்தேனும் உயர் மானம் காக்கத் துணியும் உத்தமியை எவர்தான் என்ன செய்துவிட முடியும்.

✲✲✲

பெண் வெறும் மலர் அல்ல. பொன்மலர். மலரைப் போன்ற மென்மையும் பொன்னைப் போன்ற உறுதியும் படைத்தவள்.

✲✲✲

அழகிய முகம் ஒருவரை வசீகரிக்கும்.
அன்பான பேச்சு ஒருவரை அடிமைகொள்ளும்.

✲✲✲

துன்பத்திற்கும் கடலுக்கும் நிறையச் சம்பந்தம் உண்டு. அதனுல்தான் துன்பக்கடல் என்று சொல்லுகிருேம். இரண்டிலும் ஆரம்பத்தில்தான் அலைகளும், குமுறல்களும், பேரிரைச்சல்களும் எழும். உள்ளே செல்லச் செல்ல அமைதி ஏற்படும்,

தொகுப்பு: சுகிர்தா

## பல்கேரிய விகடன் பீட்டர்

**ஒரே குட்டையில்....**

வியாபார நிமித்தமாக பீட்டர் வெளியூர் சென்ருன். ஒரு விடுதியில் பத்து நாட்கள் வரை தங்கினுன். ஒரு துட்டு கூட கொடுக்காது சௌக்கியமாகச் சாப்பிட்டுக் குடித்து உறங்கினுன். விடுதியாளன் இவன் கணக்கை மிகையாக ஏட்டில் எழுதி வைத்திருந்தான். பீட்டர் வெளிக் கிளம்பும் சமயம் விடுதிக்காரன் நிறையத் தொகை கூடின பட்டியலைச் சமர்ப்பித்தான்.

'ஓகோ! இதுதான் என் செலவுப் பட்டியலா?'

'ஆமாம். அதேதான்.'

'என்னை உனக்குத் தெரியாது போலிருக்கிறது.'

'இல்லையே. உங்களை யாரெனத் தெரியவில்லையே!'

'நாமிருவரும் ஒரே குட்டையில் ஊறும் மட்டைதான்.'

'அப்படியானுல் நீங்கள் பாதிப் பணம் கொடுத்தால் போதும்'

பீட்டர் பாதிப் பணத்தைக் கொடுத்துவிட்டு வாயிலை நோக்கி நடந்தான். வெளியேறும் நேரத்தில் விடுதியாளன்

'உங்கள் விடுதி எங்கிருக்கிறது? வசதிப்படும் பொழுது நானும் அங்கு வந்து தங்கலாமென்று பார்க்கிறேன்.'

'நான் விடுதியாளன் அல்லவே!' என்ருன் பீட்டர்.

'நீதானே இப்பொழுது என்னைப் போன்ற ஒரே தொழிலைத்தான் செய்வதாகக் கூறினுய்' என்று மடக்கினுன்.

'யாரப்பா இல்லையென்றது? உன்னைப் போல் நானும் ஒரு கில்லாடிதான்.'

தமிழில்: கே. கணேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❋ இத்தாலியிலுள்ள பைசா எனும் நகரத்தில் ஒரு கோபுரம் இருக்கிறது. இக்கோபுரம் 1173 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கோபுரத்தைச் சுற்றியுள்ள நிலம் மென்மையும் சதுப்பும் நிறைந்தது. அதனால், இப் பைசா கோபுரம் ஒரு புறமாகச் சாய்ந்துவிட்டது. இச் சாய்ந்த கோபுரம் ஒவ்வொரு வருடமும் சிறிது சிறிதாகச் சாய்கிறது. பைசா நகரத்திற்கு அழகைக் கொடுக்கின்ற இக்கோபுரத்தை மேலும் சாய்ந்து விழுந்துவிடாமல் தடுப்பதற்காக, இத்தாலிய அரசு உலக நாட்டு எஞ்சினியர்களிடையே ஒரு போட்டியை ஏற்படுத்தியுள்ளது; தடுக்கும் வழிவகையைக் கூறுபவர்களுக்குச் சிறந்த பரிசில் காத்திருக்கின்றது.

❋ ஆபிரிக்காவிலும் ஆசியாவின் சில பகுதிகளிலும் வாழ்கின்ற குள்ளமான ஓரின மனிதரைப் பிக்மீஸ் என்பர். ஆபிரிக்காவில் கொங்கோ, புருண்டி, கமரோன், காபொன் முதலிய பகுதிகளில் பிக்மீஸ் உள்ளனர். இவர்களின் சராசரி உயரம் 4 அடி 5 அங்குலமாகும். பிக்மீஸ் குள்ளர்கள் மிருகங்களை வளர்ப்பதில்லை; பயிர் செய்வதில்லை. இவர்கள் வேட்டையாடுதல், காய்கனி தேடல், மீன் பிடித்தல் என்பன மூலம் சீவிக்கின்றனர். ஆசியாவில் மலாயா, சுமாத்திரா, போர்னியோ முதலிய நாட்டுக் காடுகளில் பிக்மீஸ் வாழ்கின்றனர்.

❋ 'எந்த ஒரு உறுப்பு கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றதோ அந்த உறுப்பு கூடுதலாக வளர்ச்சியடையும்' என்பது பரிணாம தத்துவம். ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து நீளமாக இருப்பதற்கு இதுவே காரணம். உயர் மரக் கொம்பர்களில் உணவைப் பெறுவதற்காக இது கழுத்தை நீட்டி நீட்டி நீளமாக்கிக் கொண்டது. நீண்ட கால்களும், நீண்ட கழுத்தும், ஒன்றரை அடி நீளமான நாக்கும் ஒட்டகச் சிவிங்கியின் இரைதேடலுக்குப் பெரிதும் உதவுகின்றன.

— கமலி

## பள்ளிப் பகிடி

சில காலங்களுக்கு முன் சுண்ணாகத்திலுள்ள பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்தோம். அப்போது பாடசாலை முடிவடையும் இறுதிப் பாட நேரம். எங்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் நாடகம் பழக்க வேண்டுமென்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். நாங்களும் பாடசாலை முடிவடையும் மணி ஒலித்ததும் நாடகம் பார்க்கும் ஆவலுடன் பாடசாலை மண்டப யன்னலை நோக்கி ஓடிச் சென்று எட்டிப் பார்த்தோம். அப்போது மாணவர்களால் ''கொதியர்'' என்று அழைக்கப்படும் ஆசிரியர் 'அங்காலை போங்கடா மடையன்களே' என்று முழங்கிக் கொண்டு கதிரையை விட்டெழும்பினர். உடனே நாம் ஓட ஆரம்பித்ததும் ஆசிரியர் வெளிவந்து, 'தம்பியவை, தம்பியவை, நான் உங்களை ஏசவில்லை. நீங்கள் வந்து தாராளமாகப் பாருங்கோ. நாடகத்திலை ஒரு கட்டத்தில் இப்படிக் கூற வேண்டும் என்று செய்து காட்டினேன்' என்று சிரித்தபடி கூறினர். அதைக் கேட்டு நாடகம் பழகும் மாணவர் உட்பட நாம் எல்லோரும் வயிறு வெடிக்கச் சிரித்தோம்.

— இந்திரா

# அகத்தியரும் விநாயகரும்

அகத்தியர் என்பவர் குறுமுனிவர்
ஆயினும் தவத்தினிற் பெருமுனிவர்
மிகப் பழங்காலத்தில் வாழ்ந்து வந்தார்
விருப்புடன் சிவனடி வணங்கி வந்தார்.

தமிழ்த்திரு நாட்டினில் அவர் ஒரு நாள்
தங்கிய காலத்திற் காகம் ஒன்று
கமண்டல மீதினில் வந்திருந்து
கவிழ்த்துநல் நீரினை ஊற்றியது.

காகம் இருந்த இடத்தினிலே
காட்சி அளித்தனன் ஒரு சிறுவன்
கோபம் மிகுந்திடக் குறுமுனிவர்
குழப்படிப் பொடியனைக் குட்ட வந்தார்.

அழகிய சிறுவனும் ஓடலுற்றான்
அகத்திய முனிவனும் துரத்தலுற்றார்
இளையவன் ஓடிட முனிவர் பிரான்
இடையில் களைப்பு வந் திருந்து விட்டார்.

அதிசயம் மறைந்தனன் அச்சிறுவன்
அவ்விடம் தோன்றினன் ஆனைமுகன்
விதம் வித வேடத்தில் விநாயகராய்
விளங்கினர் உண்மையை அகத்தியனார்.

உன் தலை மீதினிற் குட்ட வந்தேன்
ஓ! பிழை பொறுத்திட வேண்டுமென்று
தன் தலைமீதினிற் குட்டிமிகத்
தாழ்ந்து வணங்கினர் தமிழ் முனிவர்.

உன்பெயர் உன்திறன் உலகமெலாம்
ஓங்குக ஓங்குக என்று சொல்லி
அன்புடன் பிள்ளையார் அருள் புரிந்தார்
அகத்திய மாமுனி மனம் மகிழ்ந்தார்.

காகமாய்க் கணபதி வந்தருளி
கவிழ்த்த அக் கமண்டல நீர் பெருகி
ஆகியோர் ஆறெனப் பாய்கிறது
அதன் பெயர் அழகிய காவிரியாம்.

— கவிஞர் வி. கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாக்கர் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்....

— க. பரராஜசிங்கம்

இரண்டாகப் பிளந்து போட்டிருக்கும் பனை மரக் குற்றியிலிருந்து. கால்களை லாவகமாக அகட்டி முன்னால் குவிந்திருக்கும் மணலுக்குள் வைத்துக்கொண்டு, இரண்டு கைகளாலும் பிளாவைப் பிடித்து நெஞ்சுக்கு நேராக வைத்துக்கொண்டு, போதி மரத்துப் புத்தராகி உபதேசம் செய்துகொண்டிருக்கிறார் 'கிளாக்கர்'.

அவருடைய பெயர் எத்தனை பேருக்குத் தெரியுமோ, 'கிளாக்கர்' என்றால் ஊரில் அவர் தான் மட்டுமென்பது எல்லாருக்கும் தெரியும். கல்யாணம் செய்த புதிதில் இரண்டு கிழமைக்கு ஒரு தடவையாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தவர், இப்போது கிழமைகளை சில மாதங்களாக்கிவிட்டார்.

நல்லூர் கொடி ஏறும் போதும், பனை கொடி ஏறும் போதும் அவருடைய வரவு நிச்சயம்!

'ஐயா எப்ப வந்தது?'

'தம்பி எப்ப பயணம்?'

இன்னும் நாலைந்து நாட்களுக்கு ஊர் முழுவதும் இதே கவலையாகத் தான் இருக்கப் போகிறது. கிளாக்கருக்கும் மற்றவர்களின் கவலையால் மிகவும் பெருமை. ஆனால் 'கிளாஸ் திறீ' கிளாக்கராகவே இருந்து, இந்தப் பெரிய கல்வீட்டை எப்படிக் கட்டுவித்தார் என்று அவர் இல்லாத வேளைகளில் மற்றவர்கள் படுகின்ற கவலையும், சொல்லுகின்ற விபரங்களும் அவருக்குத் தெரியாது.

ஏழெட்டுப் பேர் சுற்றியிருந்து கிளாக்கரின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கள்ளுக் கொட்டில்காரத் தம்புவுக்கும் கிளாக்கர் வந்துவிட்டால் பெருமை பிடிபடாது. கிளாக்கர் வந்து போன கதையை குறைந்தது ஒரு கிழமைக்காவது அங்கு வருபவர்சளுக்குச் சொல்லாவிட்டால் தம்புவுக்குப் 'பொச்சம்' தீராது.

'உந்தக் கவுண்மேந்து நீண்டு பிடிக்கும் எண்டா நினைக்கிறியள். நான் சொல்லுறன். இன்னும் எட்டு மாதத்துக்கு மேலை ஓடாது. வேணுமெண்டால் பாருங்கோ.'

கிளாக்கர் அடித்துச் சொல்லுகிறார். சுற்றி இருப்பவர்களுக்கு ஒரே சந்தோசம். கிளாக்கர் சொன்னால் கட்டாயம் கவுண்மேந்து விழுந்துதான் போகும் என்று அவர்களுக்கு நம்பிக்கை.

கள்ளு ஒவ்வொரு போத்தலாக உள்ளே போக, கவுண்மேந்து ஓடுற மாதங்களும் ஒவ்வொன்றாகக் குறைந்துவிடும். மூன்றுமாதங்களுக்கு வரும் போது அவருக்கு முழுக்குக்கும், சாப்பாட்டுக்கும் நேரமாகிவிடும்.

அரசியலுக்கு இடையிடையே, எப்பிடித் தன்னுடைய 'ஓப்பிசி'ல் வேலை செய்யும் (தனக்குக் கீழ் என்றும் சொல்லுவார்) சிங்களக் கிளாக்மாரை தான் 'கலக்கி' வைத்திருக்கிறேன் என்பதையும் அளப்பார். அப்போதெல்லாம் தம்புவுக்கு இனி மேல் கொழும்புப் பக்கம் முந்தி மாதிரிக் கலம்பகம் ஒன்றும் வராதென்றும், அங்கே ஓர் கடையில் நிற்கும் தனது மருமகன் பெடியனுக்கு ஒரு ஆபத்தும் வராதென்றும் ஒரு நம்பிக்கை பிறக்கும்.

சூரியன் பனை உச்சிக்கு வரும் வேளை, கிளாக்கரும் 'ரொப்'புக்கு வந்துவிடுவார். கண்கள் இரண்டும் சிவந்து, கதையும் ஒரு மாதிரி வழுக்கத் தொடங்கும் போது அவர் வீட்டுக்குப் போக எழும்புகையில் கூட இருப்பவர்களும் எழுந்துகொள்வார்கள். கிளாக்கர் வீட்டுக்கு வந்துவிட்டார்! வீட்டுக்குள் இருந்து இறைச்சிக் குழம்பின் வாசனை கமகமக்கிறது. 'சம்மறி'யில் இருக்கும் நண்பனிடம் கைமாற்றாக வாங்கிய நூறு ரூபாயில் எழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருவர்: என்னப்பா! ஒருவருக்கும் பத்திரிகை இரவல் கொடுக்க மாட்டாய். இப்ப மட்டும் விழுந்து விழுந்து கொடுக்கிறுய்!

மற்றவர்: ஒன்றுமில்லே! நான் எழுதிய கட்டுரை வந்திருக்கு. அதுதான்.

—கே. மகாலிங்கம், அரியாலே.



பத்தைந்தை எந்தவுடனேயே மனேவியின் கையில் கொடுத்துவிட்டாராகையால் மனேவியின் முகத்திலும் ஒரே சந்தோசம். மாமியார்க் கிழவி அங்கும் இங்கும் ஓடி மகளுக்கு ஒத்தாசை செய்துகொண்டே, 'பிள்ளே அவரைக் குளிக்கச் சொல்லன்' என்ற உத்தரவையும் கொடுக்கிருர். மருமகனின் வீரப் பிரதாபங்களே, அவர் மற்றவர்களுக்கு வீட்டில் வைத்து அளக்கும் போது, தூரத்திலிருந்து ஏதோ வேலே செய்வது போல் பாவனே காட்டி, மாமியாரும் நன்ருக அறிந்து வைத்திருக்கிரு. கோயிலில் சந்திக்கும் ஏனேய மாமிமாருக்கு அவற்றைச் சொல்லுவதிலும் பார்வதி ஆச்சி சளேப்பதில்லே.

'றெயிலுக்கை நித்திரை முழிச்சு கண்ணெல்லாம் சிவந்து கிடக்கு. வெய்யிலுக் காலேயும் வந்திருக்கிருர். டக்கெண்டு குளிக்கச் சொல்லன்.'

மருமகன் கள்ளு, — அதுவும் பனங்கள்ளுத்தான் — உடம்புச் சுகத்துக்காக, கொஞ்சமாக, எப்பெண்டாலும் பாவிப்பார் என்று நினேத்துக் கொண்டிருக்கும் கிழவி, அதைக் காட்டிக் கொள்ளாத மாதிரி நுட்பமாக, அவர் குளிக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்துகிருர்.

'படினம்' போட்டுக் கதைப்பதற்கு இந்த மாமிமாரை மிஞ்ச இனிமேல் தான் யாராவது பிறக்கவேண்டும்!

கிளாக்கர் இரவு றெயினில் போட்டுப் படுப்பதற்காக வாங்கிய இங்கிலீஸ் பேப்பரை எடுத்து, மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, எல்லாவற்றையும் புரிந்து கொண்டவர் போல் கதிரையில் சுழட்டி எறிந்துவிட்டு, தயாராக வைக்கப்பட்டிருந்த துவாயையும் வாசச் சவுக்காரத்தையும் எடுத்துக்கொண்டு கிணற்றடிக்குப் போகிருர். மாமியார் வந்து கசங்கியிருந்த பேப்பரை எடுத்துப் பத்திரமாக மடித்து அலுமாரிக்கு மேல் வைக்கிரு.

உலகத்திலே ஒருதருக்கும் தெரியாத இங்கிலீஸ் தன்னுடைய மருமகனுக்குத்தான் தெரியும் என்று கிழவிக்கு உள்ளுக்குள் ஒரு புழுகம். மருமகன் அந்தப் பாஷையைப் போட்டு இடைக்கிடை படுத்துகிற சித்திரவதை மனுசிக்குத் தெரியாது.

கிணற்றடியிலிருந்து பயங்கரமான சத்தம் வந்து கொண்டிருக்கிறது. ஒன்றுமில்லே. கிளாக்கர் பாடிப் பாடிக் குளிக்கிருர். சம்மறியில் பூட்டு உடைந்து கிடக்கும் பாத்றூமுக்குள் யாரும் வந்துவிடக் கூடாதே என்ற பயத்தில் பாடிப் பாடிக் குளிக்கும் பழக்கம். இப்போது அவருக்கு நல்ல 'மப்பு'. பிறகென்ன? வெளுத்து வாங்குகிருர்.

ஃ

கிளாக்கருக்குச் சாப்பாடு நடக்கிறது! சாப்பாட்டு விஷயத்தில் மனுசன் வஞ்சகமில்லாதவர். கொழும்புச் சாப்பாட்டுக் கடைகளுக்குப் போனலே எழும்ப ஒரு அரை மணித்தியாலம் செல்லும். இங்கே மனுசியின் கையால் சமைத்த இறைச்சிப் பொரியலும், குழம்பும், ரசமும்......... முகத்தில் வியர்வை வழிந்து ஓட ஓட ஒரு பிடி பிடிக்கிருர். மனேவி பக்கத்தில் இருந்து விசிறிக் கொண்டிருக்கிரு. கிளாக்கருக்கு வெறி முறிந்து ஒரு 'பதமான' கணக்கு வருகிறது. மனேவியை வடிவாப் பார்க்கிருர்.

'என்ன புதினமாய்ப் பாக்கிறியள்'

மனிசியும் கொஞ்சம் செல்லம் தான் விடுகுது!

கிளாக்கருக்கும் சம்மறியில் இருக்கிற இளம்பெடியள் கதைக்கிற கதைகள் நினேவுக்கு வருகிறது.

'சாய்... கொஞ்ச நாளேயுக்குள்ளே நல்லாய் மெலிஞ்சு போனுய் அப்பா...'

உண்மையில் மனிசி மெலியவில்லேயானுலும் தன்னே ஒருமுறை பார்த்துக் கொள்கிறது.

'என்ன மாதிரி மெலிஞ்சு போனுய் அப்பா'

ஒவ்வொரு முறையும் அவர் வரும் போது கதைக்கிற கதைதான் இது; அது ஏனென்று மனிசிக்கும் விளங்கும்.

ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பின்னேரமும் கிளாக்கர் தம்புவின் கொட்டிலுக்கு வந்துட்டார். லீவில் வரும் நாலைந்து நாட்களுக்குள் முடிந்த அளவு குடித்துவிட வேண்டும் என்பதுதான் அவர் கொள்கை.

சம்மறியில் இரண்டு ரூபாய் 'சின்டிக்கேற்' போட்டு எடுக்கிற களுத்துறையான் அவருக்கு ஒரு மூச்சுக்கும் காணாது.

காலை கொட்டிலில் நடந்தது இரவு ஒன்பது மணி வரையும் நடக்கும். நாளைக்கு கிளாக்கர் கொழும்புக்குத் திரும்பிவிடுவார். அங்கு போய் தன்னை கிராம சபை 'எலெக்சன்' கேட்க வேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்தி தான் மாட்டேன் என்று விட்டதாகவோ, அல்லது அடிக்கடி கொழுவல் கதை கதைக்கிற பக்கத்து வீட்டுக்கரானுக்கு ஒரு அடியில் முன் வாய்ப் பல்லு அவ்வளவும் வீழுத்திவிட்டதாகவோ ஏதாவது அளக்கத்தான் போகிறுர்.

கிளாக்கரின் கதையே அவ்வளவுதான்!


—0—

## மாதுளம் பழம் என இதற்கு பெயர் வரக் காரணம்?....

மாது உளம் என்பது இந்தப் பழத்தின் பெயர். அதாவது பெண்களின் உள்ளத்தைப் போன்ற தன்மையுடைய பழமாம் இது. எண்ணற்ற ரகசியங்களை இதயத்துள் போட்டு அடைத்து வைத்துக் கொண்டு, ஏதொன்றும் தெரியாதது போல வெளிக்குத் தோற்றமளிப்பது பெண்ணுள்ளத்தின் தன்மை! இப்படித்தான் இந்த மாதுளம் பழங்கூட, வைர மணிகள் போன்ற நறுஞ் சுவைச் சுளைகளை வரிசை வரிசையாக அடுக்கி மறைத்து வைத்துக் கொண்டு, வெளித் தோற்றத்திற்கு மிகச் சாதாரணமாகக் காட்சி தருகின்றது.

இதனுல் இந்தப் பழத்திற்கு ''மாதுளம்'' என்று பெயர் வைத்திருக்கின்றுர்கள் நம் ஆதி காலத் தமிழர்கள்.

மலர்விழிமூர்த்தி, மட்டக்களப்பு.



''இதுவும் ஒரு நாடகத்தில்'' இராஜேஸ்வரி சண்முகமும் எஸ். எஸ். கணேசபிள்ளையும் தோன்றும் ஒரு நகைச்சுவைக் காட்சி.




எதிர்பாருங்கள்!

சிறுவர் சிறுமிகளுக்கோர் இன்சுவை விருந்து!

தீவாந்தரம்

புதிய விறுவிறுப்பான சிறுவர் தொடர்கதை

சிரித்திரன் இதழில் யாழ்நங்கை எழுதுகிறுர்

# சொல்லுங்கள் கேட்கிறோம்

மலை நாட்டில் சிரிப்பை மாதந் தோறும் அளிக்கும் 'சிரித்திரன்' சேவை பாராட்டத் தக்கது. குளிரில் இருக்கும் நுவரெலியாவுக்கு சிரிப்பின் மூலம் வெப்பத்தைத் தரும் உங்கள் சேவைக்கு எனது பாராட்டுகள். வாழ்க! வளர்க!! மாதமிரு முறை எங்கள் குளிரைப் போக்க வருவாயாக.

**ஆர். ஹென்றி, ஹெடன் ஹில் வீதி, நுவரெலியா.**

—0—

ஐயா,

தாங்கள் வெளியிடும் சிரித்திரன் மிக மிக நகைச் சுவை உள்ளதாக உள்ளது. அதன் வளர்ச்சியில் எனக்கு மிகவும் ஆதரவு உண்டு. தமிழ் நாட்டில் உள்ள பல பத்திரிகைகளில் இது மிக சிறந்து விளங்குகிறது. கேள்வி - பதில் மிக நகைச் சுவை நிரம்பி உள்ளது. இதற்கு ஆதரவு அளிக்க தமிழ்ச் சமூகம் ஒரு மனதாக முன்வரும் என நம்புகிறேன்.

**வி. சிவராமன், 51/11, குகாலயம், சென்னை-23.**

—0—

தங்கள் சிரித்திரன் பல சோதனைக் கட்டங்களைத் தாண்டி வீறுநடை போடுவதைப் பார்க்கும் போது தங்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆரம்பத்தில் நகைச் சுவைக்கு முக்கிய இடம் கொடுத்த சிரித்திரன் காலப் போக்கில் இலக்கிய ஏடாகிப் பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது. சிரித்திரன் மாதமிரு முறை மலராகி வார இதழாகி மலரும் நாள் வெகு தூரத்தில் இல்லை. தங்கள் இலக்கியப் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

**ப. முல்லைமணி, நாவலர் ரோட், முள்ளியவளை.**

—0—

நவம்பர் இதழில் வெளியான ''ஆலடி வயிரவர்'' நன்ருக இருக்கிறது. து. வைத்திலிங்கத்திற்கு என் பாராட்டுகள். செங்கை ஆழியானின் ''மயான பூமி'' உயிரோட்டம் நிறைந்ததாகத் தெரிகிறது. மகுடியின் பதில்கள், காசி ஆனந்த்னின் மாத்திரைக் கதை சிறப்பானவை. முன்னர் வெளியான சில கதைகள் உண்மையில் அமுதமானவை தாம். தொடர்ந்து சிறப்பாக வெளிவர வாழ்த்துகிறேன்.

**என். கே. குலசிங்கம், அம்மன் கோவிலடி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**


பாதியிலே நின்று போச்சே ஏலேலோ

இசை விழாவின் இன்னிசைக் கச்சேரியை ரசித்துக்
கொண்டிருக்கும்போது உங்கள் ரேடியோ
பழுதடைந்துவிட்டதா ?

அதற்கென்ன ? இருக்கவே இருக்கிறது

"ரேடியோஸ் பதி"

எவ்விதமான வானெலிகளென்றுலென்ன, கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகளென்றுலென்ன
குறைந்த செலவில் நீடித்த பாவனைக்கேற்ப திருத்தித் தருபவர்கள்

ரேடியோஸ் பதி

திருத்தம் செய்த பொருட்களுக்கு ஒரு வருட உத்தரவாதம் உண்டு.

Radios Pathy
40. KASTHURIYAR ROAD, JAFFNA

40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பின் சிரிப்பு



ஒருவர்: ஏன் போயிட்டு உடனே வருகிறாய்?

மற்றவர்: புலி சுடப் போனேன். பூனை குறுக்காலே போனது. திரும்பி வருகிறேன்.

— கே. மகாலிங்கம், அரியாலை.



காதலன்: கண்ணே! உன்னைத் தான் மிகவும் விரும்புகின்றேன்.

காதலி: ஏன்! என் கண்ணில் மட்டும் தான் காதலா!

— கே. மகாலிங்கம், அரியாலை.


—0—

ஒருவர்: என் பெயரில் ஒரு ஸ்டாம்ப் வெளியிடப் போகிறேன்.

மற்றவர்: என்ன!

ஒருவர்: ஒரு றபர் ஸ்டாம்ப் செய்விக்கப் போகிறேன்.

— ஜோக்கிரெட்டீஸ்



ஆசிரியர்: பூமி உருண்டையா? தட்டையா?


மாணவன்: முற்காலத்தில் உருண்டை. இக்காலத்தில் வேறு உருவம்.


ஆசிரியர்: ஏன் அப்படி?

மாணவன்: முப்பது மாடி, நாற்பது மாடி என்று மாடி மாடியாய்க் கட்டினால் என்கினன்று பூமி உருண்டையாகும்.

ஆசிரியர்: ?...?...!...!

— கே. மகாலிங்கம், அரியாலை.



ஆசிரியர்: திரை கடலோடி திரவியம் தேட யாருக்கு ஆசை?

ஒரு மாணவன்: எனக்கு ஆசை தான் சார். ஆனால் சுங்க இலாகா விடாதே!

ஆசிரியர்: ...!...!...!

— கே. மகாலிங்கம், அரியாலை.



ஒருவர்: தம்பி! நீ தெய்வம் போல வந்து என் மகளை விபத்திலிருந்து காப்பாற்றியதற்கு நன்றி.

மற்றவர்: சந்தோசம்... நான் உங்க மகளைக் கலியாணம் செய்ய விரும்புகிறேன்...

ஒருவர்: முட்டாள்...

மற்றவர்: என்ன சார்! தெய்வத்தை முட்டாள் என்கிறீர்களே!

— அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ர கடலோடி
தேட யாருக்கு

எனக்கு ஆசை
ஆனல் சுங்க
டாதே!

!...!

கம், அரியாலே.



நீ தெய்வம்
து என் மகளை
ந்து காப்பாற்
நன்றி.

ாசம்... நான்
ாக் கலியாணம்
ரும்புகிறேன்...
ள்...

சார்! தெய்
ட்டாள் என்கி

— அதிம்துரம்



அந்த வர்ண சாரியைத் தேர்ந்தெடுப்பதா? இந்த வர்ண சாரியைத் தேர்ந்தெடுப்பதா? என்பதில் பெண்கள் மனதில் எப்போதும் சஞ்சலம். கண்களை மூடிய வண்ணம் எந்த வர்ண சீமா சாரியைத் தேர்ந்தெடுத்தாலும் அதில் ஓர் தனி வனப்பு.

சிந்தெட்டிக் ஆடை வகைகளில்

நாங்கள் பெருமையுடன் அளிக்கும் புதிய படைப்புகள்

சீமா சாரிகள் மற்றும்

நங்கையர் அணியும்

நாகரீக ஆடைகள்

# சீமா சில்க் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்.,

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தந்தி: சீமாசில்க் தொலைபேசி 7170

கவின் அச்சகம், 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்:- கியூபீ53/900

★

இப்புனித நத்தார் பண்டிகையின் போது சம்பியன் திரெட் மனுபக்சரிங் ஸ்தாபனத்தார் அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மற்றும் தங்களைச் சார்ந்த எல்லோருக்கும் மனமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.


★



கலை உள்ளம் படைத்தவர்கள் தமது சித்திரத் தையல் வேலைகட்கு தேர்ந்தெடுப்பது

டாம் மார்க் தையல் நூலே

எங்கும் பெற்றுக்கொள்ளலாம்




தயாரிப்பாளர்கள் :

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி.

கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org